திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2020

விலை ரூ.5/-

திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவ சிறப்பிதழ்



23-09-2020
புதன் கிழமை
இரவு:கருட வாகனம்

## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்
## 2020 செப்டம்பர் 19 முதல் 27 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்ப ஸ்வாமி
# வருடாந்திர
# பிரம்மோத்ஸவம்
# 2020 செப்டம்பர்
# 19 முதல் 27 வரை



**19-09-2020 சனிக்கிழமை**
**பகல் : துவஜாரோஹணம்**



**19-09-2020 சனிக்கிழமை**
**இரவு : பெரிய சேஷ வாகனம்**



**20-09-2020 ஞாயிற்றுக்கிழமை**
**பகல் : சிறிய சேஷ வாகனம்**



designpsivaprasad

தத: ச்வேதைர்ஹயைர்யுக்தே
மஹதி ஸ்யந்த நே ஸ்தி தௌ ।
மாத வ: பாண்ட வச்சைவ
தி வ்யௌ சங்கெ ள ப்ரத த் மது: ॥



இதற்குப் பிறகு வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட உயர்ந்த தேரில் அமர்ந்திருந்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும், அர்ஜுனனும் தெய்வீகமான சங்குகளை முழக்கினார்கள்.

*- ஸ்ரீமத் பகவத் கீதை 1-14*



விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத:
ஸதா வேங்கடசம் ஸ்மராமி ஸ்மராமி।
ஹரே வேங்கடேச ப்ரஸீத ப்ரஸீத
ப்ரியம் வேங்கடேச ப்ரயச்ச ப்ரயச்ச॥

திருவேங்கடத்தானைத் தவிர நாதன் இல்லவேயில்லை. எப்போதும் வேங்கடத்தானை நினைத்தபடியே இருக்கிறேன். பாபங்களைப் போக்கும் வேங்கடேசா எனக்குத் தவறாமல் அருள் செய்ய வேணும். ஐச்வர்யத்தைத் தரும் பெருமாளே, நான் விரும்புவதை விரைவாகத் தந்தருள்.

*- ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்தோத்ரம்-9*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை! இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!





கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!

பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.

அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
"ஸப்தகிரி" படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... "ஸப்தகிரி" படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பேணுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!

## சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

அலுவலக பணிநாட்களில்
"ஸப்தகிரி" மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...

அலுவலகம் : 0877-2264543
டி.டி.பி. பிரிவு : 0877-2264359
ஆசிரியர் : 0877-2264360

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**sapthagiri_helpdesk@tirumala.org**





மலர் 51 இதழ் 04


# உள்ளுறை

பக்கம்


**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** 7
*- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.*

**அரிய புவியியல் வளைவு** 11
*- திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.*

**ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்** 12
*- திருமதி பா. காயத்ரி, கேரளா.*

**திருமலையில் பூர்வாசார்யர்கள் கைங்கர்யம்** 16
*- உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*

**மஹந்துக்கள் கால திருமலை** 22
*- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.*

**திருமலை பிரம்மோத்ஸவத்தில் திவ்யப்பிரபந்த பாராயணம்** 31
*- திருமதி பிரேமா நந்தகுமார், ஸ்ரீரங்கம்.*

**தமிழ் மறை போற்றும் திருவேங்கடம்** 37
*- திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.*

**சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு...** 41
*- முனைவர் எம்.எஸ். வேங்கடாசாரி, காட்டுமன்னார்கோயில்.*

**வேங்கட வெற்பே வேத வெற்பு** 43
*- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*

**பெரியாழ்வார் அனுபவித்த திருவேங்கட கிருஷ்ணன்** 46
*- திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்.*

**ஸ்ரீகல்யாண வேங்கடரமண ஸ்வாமி, தான்தோன்றி மலை** 50
*- அறந்தாங்கி சங்கர், சென்னை.*

**இராசிபலன்– செப்டம்பர் 2020** 53
*-திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*


## வாசகர்களுக்கு...

**இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

**-பிரதான ஆசிரியர்**

## அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **கருடவாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி (திருமலை).**
பின்னட்டை : **சக்கரஸ்நானம் - (திருமலை).**


*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** *ஐ.ஏ.எஸ்.,*
*செயலாட்சித் தலைவர், தி.தி.தே.*
*பிரதான ஆசிரியர் :*
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** *பி.எச்டி.,*
*ஆசிரியர் :* **Dr. V.G.சொக்கலிங்கம்,**
*எம்.ஏ., பி.எச்டி.,*
*அச்சிடுபவர் :*
**திரு. பி.ராமராஜு,** *எம்.ஏ.,*
*சிறப்பு அலுவலர்*
*(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,*
*தேவஸ்தான அச்சகம், திருப்பதி.*
*டி.டி.பி.*
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
*தி.தி.தே., திருப்பதி.*
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


**நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.
-பிரதான ஆசிரியர்

உங்களுடன்...

# திருவோணத்திருவிழா

திருக்கோயில்களில் உற்சவங்கள் நடத்துவதின் நோக்கமே அனைத்து மக்களும் ஒன்றுபட்டு பக்தியால் இறைவனை வழிபட்டு, நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்கேயாகும். உத்+ஸவம்= உத்ஸவம் என்பதாகும். உத்– நீங்குதல், ஸவம்– துக்கம் அல்லது வருத்தமாகும். அதாவது துன்பம் நீங்கி ஆனந்தம் கொள்ளல் ஆகும்.

கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானுக்குப் பல்வேறு உத்ஸவங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தினமும் நடைபெறுகின்ற நித்யோத்ஸவம், வாரந்தோறும் நடைபெறுகின்ற வாரோத்ஸவம், பக்ஷந்தோறும் நடைபெறுகின்ற பக்ஷோத்ஸவம், மாதந்தோறும் நடைபெறுகின்ற மாதோத்ஸவம், வருடந்தோறும் நடைபெறுகின்ற வருடோத்ஸவம் என திருமலையில் என்றும் உற்சவங்களே. இந்த உத்ஸவங்களுக்கெல்லாம் மேன்மையானதாகவும் மிகச்சிறப்பானதாகவும் கொண்டாடப்படுவது பிரம்மோத்ஸவமாகும். பிரம்மம் என்றால் பெரியது என்று பொருள். உத்ஸவங்களிலேயே பெரியதாக அதிக நாட்கள் நடைபெறும் உத்ஸவமாதலால் பிரம்மோத்ஸவம் எனலாம். யார் பிரம்மம் என்று காட்டுவதற்காக பரம்பொருளான பகவான் தானே பிரம்மம் என்று அறிவிக்க வரும் உத்ஸவமே பிரம்மோத்ஸவம் எனலாம். வேதமும் எம்பெருமானை "நாராயணப் பரபிரம்மம் நாராயண பர" என்று பிரம்மமாகவே கூறுகின்றது.

ஆதியில் நான்முகன் எம்பெருமானுக்கு நடத்திய உத்ஸவமாகக் கருதி பிரம்மோத்ஸவம் எனப் பொருள் கொள்ளலாம். இது குறித்தே திருமலையில் பிரம்மோத்ஸவத்தில் பிரம்ம ரதமும் வாகன சேவைகளுக்கு முன்பாகச் செல்வதைக் காணலாம். திருவேங்கடமுடையான் புரட்டாசி மாதம் திருவோண நன்னாளில் அவதரித்ததால், ஒவ்வொரு வருடமும் புரட்டாசி (செப்டம்பர்–அக்டோபர்) மாதத்தில் வருகின்ற திருவோண நாளை முன்னிட்டு ஒன்பது நாட்கள் பிரம்மோத்ஸவம் மிகச்சிறப்பாக நடைபெறும். பிரம்மோத்ஸவம் திருவோணத்தோடு தொடர்புடையதால் திருவோணத்திருவிழா என்று ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் பாடியுள்ளனர். பெரியாழ்வாரும், "விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத்திருவிழவில்" (திருப்–9) என்று பாசுரமிடுகிறார்.

சாந்திரமானப்படி அதிகமாதம் வரும்போது திருவேங்கடமுடையானுக்கு வருடாந்திர பிரம்மோத்ஸவம், நவராத்திரி பிரம்மோத்ஸவம் என இரு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறும். இவ்விதமாக அதிக மாதம் வரும் ஆண்டுகளில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் வருகின்ற திருவோண நட்சத்திரத்தில் பிரம்மோத்ஸவம் நடைபெறுவது வழக்கம். பிரம்மோத்ஸவத்தின் ஒன்பது நாட்களும் எம்பெருமான் திருமலை மாடவீதிகளில் பகலிலும் இரவிலும் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி, பக்தர்களுக்குக் காட்சியளிப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இறுதியாக திருவோண நாளன்று எம்பெருமானுக்கு திருமஞ்சனம் பண்ணிவிட்டு, தீர்த்தவாரியும் கண்டருளப் பண்ணுவர்.

ஆழ்வார்களை தொடர்ந்து கன்னடதாசரான விஜயதாசர் பிரம்மோத்ஸவத்தின்போது திருமலைக்கு வருகைதந்து, "நின்னதரிசனகே பந்தவனல்லவோ...." என்று கீர்த்தனையும் இயற்றியுள்ளார். பதகவிதை பிதாமகர் அன்னமய்யாவும் தம் கீர்த்தனைகளில், "திருவீதுல மெரஸீ தேவதேவுடு" என்று திருமலையப்பஸ்வாமி வாகனங்களில் எழுந்தருள்வதை வர்ணிக்கிறார்.

திருமழிசையாழ்வாரோ திருவேங்கடவனின் பிரம்மோத்ஸவத்தைக் காண விழைகிறார். அத் திருவேங்கடவனையே தன் மனதுள் வந்து புகுந்ததாக இதயத்தில் வைத்து விழாவைக்காண்பதாக பாசுரமிடுகிறார்.

காணலுறுகின்றேன் கல்லருவிமுத்துதிர ஓண விழவிலொலியதிர பேணி
வருவேங்கடவா! என்னுள்ளம் புகுந்தாய் திருவேங்கடமதனைச் சென்று" – நான். திரு–41

கொரோனா பெரும் தொற்றின் காரணமாக சிறப்பு மிக்க இப்பிரம்மோத்ஸவம் ஏகாந்தமாக நடைபெறுவதால், திருமலைக்குச் சென்று நேரில் சேவிக்க இயலவில்லை என்றாலும், இப்பிறவி எடுத்த பயனுக்காக நாமும் ஆழ்வாரை போன்றே இப்பிரம்மோத்ஸவத்தை வீட்டிலிருந்தபடியே அகக்கண்களால் காண விழைவோம்.

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்ரீ.உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,
திருவரங்கம், 98842 89887.

**முன்னுரை :**


புனிதத் தலங்களுள் சிறந்ததும், உயர்ந்ததுமான திருமலை திருப்பதி பாரத தேசத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வைணவத் திருத்தலங்கள் நூற்றெட்டினுள் ஒன்று. வட நாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டினுள் ஒன்று. தென்னிந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில், சந்திரகிரி தாலுக்காவில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்திற்குத் திருமலை, அஞ்சனாத்ரி, சேஷாத்ரி, கருடாத்ரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, வ்ருஷபாத்ரி, வ்ருஷாத்ரி முதலான திருப்பெயர்கள் பல உள்ளன. ஆழ்வார்களுள் தொண்டரடிப்பொடியாழ்வார் தவிர மற்ற ஒன்பது பேரும், ஆண்டாளும் மங்களாசாசனம் செய்த திவ்விய திருத்தலமாகும். அவர்கள் வேங்கடம், திருவேங்கடம், மாமலை, வடமலை, திருமலை, நெடுவரை, பனிவரை என இத்தலத்தைக் குறித்துள்ளனர். திருமலை நம்பி, இராமாநுசர், அனந்தாழ்வான் முதலான வைணவ ஆசார்யர்களுடனும், அந்த தேசத்து அரசனான தொண்டைமான் சக்கரவர்த்தியுடனும் இத்தலத்துத் திருமால் உரையாடினார் என்பது பல நூல்கள் வழி அறியப்படும் செய்தியாகும்.

இத்தலத்திலுள்ள "திருமலை" என்ற மலைத் தொடர் கடப்பா மாவட்டத்திலுள்ள சேஷாசலம் மலைத் தொடரும், கர்நூல் மாவட்டத்திலுள்ள நல்ல மலைத் தொடரும் சேர்ந்து கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் வடபாகத்தில் பாதியாகும். இப்பாதை பண்டைக்கால இலக்கியங்களில் ஸ்ரீபர்வதம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மலை ஆதிசேஷனைக் குறிப்பதாகவும், ஏழு சிகரங்களோடு கூடின திருமலையை ஆதிசேஷனுடைய ஏழு தலைகளாகவும், வேங்கடேசன் அந்தத் தலைகளின் மீது வெகு கம்பீரமாக எழுந்தருளியிருப்பதாகவும் நூல்கள் தெரிவிக்கின்றன. அவ்ஆதிசேஷன் உடம்பின் மீது அஹோபிலம் அமைந்துள்ளதாகவும் தலபுராணங்கள் கூறுகின்றன.

"பதி" என்னும் சொல்லின் பொருள் ஊர் என்பது ஆகும். தெய்வத் தொடர்பான பெயர்களுக்கெல்லாம் அடைமொழியாகத் "திரு" என்ற சொல்லைச் சேர்ப்பது தமிழ் மரபு. எனவே, "திருப்பதி" என்பது தெய்வத் தொடர்புடைய ஊர்களையெல்லாம் பொதுவாகக் குறிக்கும் என்றாலும், சிறப்பாகத் திருமாலுக்குரிய ஊர்களை "நூற்றெட்டுத் திருப்பதிகள்" என்ற வழக்குக் குறித்தலைக் காணலாம். இப்படித் திருமாலுக்குச் சிறப்பாக உரிய நூற்றெட்டுத்திருப்பதிகளுள் பெருஞ்சிறப்பு வாய்ந்ததென ஒரு பதியின் பெயர் "திருப்பதி" என்றே வழங்கப் படுகிறது. வைணவர்கள் வடநாட்டுத் திருப்பதிகள் எனக் குறிக்கும் திருமாலுக்குரிய திவ்விய தேசங்கள் பன்னிரண்டினுள் இது முதலாவதாகக் குறிக்கப்பெறுகின்றது.

பொதுவாகத் தெய்வத் திருப்பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் அனைவரும் அடிவாரத்தில் உள்ள ஊரையும், வேங்கட மலையையும் ஒன்றாகக் கொண்டு திருப்பதி என்றே வழங்குகின்றனர்.

பண்டைக்காலத்தில் மிகச் சிற்றூராக இது இருந்த நாளில், மலையும், அடிவாரத்திலுள்ள ஊரும் திருப்பதி என்று ஒன்றாகவே கருதப்பட்டு வந்திருக்கலாம். ஆனால், இக்காலத்தில் மலையும் ஊரும் சிறப்பாகப்



பெருகி வளர்ந்துவிட்டமையால் மலை "திருமலை" என்றும், அடிவாரத்திலுள்ள ஊர் "திருப்பதி" என்றும் பிரித்து தனித்தனியே கருதப்பெறுகின்றன. ஏறக்குறைய கி.பி. 5–ஆம் நூற்றாண்டு முதல் 8–ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்களால் திருப்பதியும், திருமலையும் "வேங்கடம், திருவேங்கடம்" என்ற பெயரில் பாடப்பெற்றிருத்தலை அறியலாம்.

இன்றைய திருப்பதி கோயிலைக் கட்டியவரே இராமாநுஜர் (கி.பி.1017–1127)தான். கோபுரம் கட்டி, விமானம் அமைத்தார். திருப்பதியே அன்று தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது. வாமன புராணத்தில், "மிகப் புண்ணியமானதும், தேவர்கள் வழிபட்டதும், மலைகளின் சிறந்ததுமான திருவேங்கடம் என்று பிரசித்தி பெற்றதுமான ஒருமலை தமிழ்நாட்டில் இருக்கிறது" என்று கூறப்பட்டுள்ளது. அது புராண காலம். வரலாற்றுக்காலமான சங்க காலத்திலும் வேங்கடம் தமிழ்நாட்டின் வட எல்லையாக இருந்தது. *"வடவேங்கடம் தென்குமரி ஆ இடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து"* என்பது தொல்காப்பியப் பாயிரம்.

ஏழுமலையான்கோயில், கோவிந்தராசப் பெருமாள் கோயில், பத்மாவதி தாயார் கோயில், சுற்றியுள்ள சிறு கோயில்கள் ஆகியவற்றில் மொத்தம் 1068 கல்வெட்டுக்கள் நகல் எடுக்கப்பட்டன. அவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை தமிழ் மொழி கல்வெட்டுக்கள். தெலுங்கு மொழி கல்வெட்டுகள் 50 தான் உள்ளன (REPORT ON THE INSCRIPTIONS) திருப்பதி தேவஸ்தான வெளியீடு–1930).

இராமாநுசரின் சீடரான அனந்தாழ்வானால் (கி.பி. 1053) அருளப்பட்ட நூல் வேங்கடேச இதிகாஸ மாலா என்பதாகும். அந்நூலின் தொடக்கத்திலேயே, உபய விபூதிகளின் நாயகனும், கருணையே வடிவானவனும், வைகுண்டத்தில் நித்யசூரிகளின் கைங்கர்யங்களை அனுபவிப்பவனும், ஸ்ரீ:பதியான ஸ்ரீமந்நாராயணன், பிறவிக் கடலில் சிக்கித் தவிக்கும் இந்த லீலாவிபூதியில் உள்ள எண்ணற்ற பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காத்து, அவர்களை இந்த ஸம்சாரக் கடலைத் தாண்டுவிப்பதற்காகவே திருமலையில் கோயில் கொண்டுள்ளதாக அருளியுள்ளார். மேலும், "என்னுடைய திருவடிகளைப் பற்றினார்களின் பாபக்கடலை முழங்கால் அளவுக்கு வற்றடித்துத் தருகிறேன்" என்பதை உணர்த்தவே அவர் தன் வலது திருக்கையை தன் திருவடிகளை நோக்கியும், இடது திருக்கை முழங்காலைத் தொட்டுக் காட்டுவதாகவும் இந்நூலில் அனந்தாழ்வான் அருளியுள்ளார். அவர் அருளியது போல் எண்ணற்ற மக்கள் திருமலையப்பனின் திருவடிகளில் சரண்புகுந்து அவருக்குத் திருப்பணிகள் புரிந்து உய்வடைந்துள்ளனர். அவர்களுள் மாமன்னர்கள் சிலர் மலைமேல் நிற்பவனுக்குப் புரிந்த திருப்பணிகளுள் சிலவற்றை இந்தக் கட்டுரையில் காணலாம்.

**திருவேங்கட மலை ஏழு மலைகளின் தொடராக அமைந்துள்ளதால் தான் இம்மலையை ஏழுமலை எனவும், பெருமாளை ''ஏழுமலையான்'' என்றும் அழைக்கின்றோம். இம்மலையின் தலைப்பகுதி "திருமலை" என்றும், இடைப்பகுதி "அஹோபிலம்" என்றும், வால் பகுதி "ஸ்ரீசைலம்" என்றும் அழைக்கப்படுகிறது. ஆதிசேஷன் இக்கலியுகத்தில் இம்மலைத் தொடராகப் படர்ந்து, எம்பெருமான் எழுந்தருள தன் மடியைத் தந்திருப்பதாக பிரம்மாண்ட புராணம் கூறுகிறது. அஞ்சனாத்ரி, சேஷாத்ரி, கருடாத்ரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, வ்ருஷபாத்ரி, வ்ருஷாத்ரி என்பதே அந்த ஏழுமலை (ஸப்தகிரி)களாம். இதையே ஸ்ரீவேங்கடேஸ்வர ஸுப்ரபாதத்தில்,**

*"ஸ்ரீசேஷசைல கருடாசல வேங்கடாத்ரி*
*நாராயணாத்ரி வ்ருஷபாத்ரி வ்ருஷாத்ரி முக்யாம்*
*ஆக்யாம் த்வதீய வசதேரநிசம் வதந்தி*
*ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்"* **எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.**



# ஸ்ரீவாரி பாதங்கள்



**ஸ்ரீமந்நாராயணனை திருப்பாதங்களிலிருந்து ஆரம்பித்து, திருமுகம் வரை தரிசனம் செய்தல் வேண்டும் என்பது பெரியோர்களின் வாக்கு. "பாத தரிசனம் பாபவிமோசனம்" என்பதற்கிணங்க, ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்திலிருந்து மஹாலக்ஷ்மி தாயாரை தேடிக் கொண்டு இப்பூவுலகில் தன்னுடைய திருப்பாதங்களை வைத்த இடமே திருமலையிலிருக்கும் இந்த நாராயணகிரி. அலிபிரியில் பாதால மண்டபம்" என்று ஸ்ரீவாரி பாதங்களுக்கு தனி ஆலயமே அமைந்துள்ளதை காணலாம். அதுமட்டுமின்றி திருவேங்கடமுடையானின் வலது திருக்கரம் (கடி ஹஸ்தம்) தன்னுடைய திருப்பாதங்களை சுட்டிக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளதை காணும்போது "ஸ்வாமி திருப்பாதங்களை பற்றினால் நாம் நம் வாழ்வில் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட்டு சுகமான வாழ்வு வாழ்ந்து, வைகுந்த பதவியை அடையலாம் என்பதை உணர்த்துவது போல் அமைந்துள்ளது.**

**தொண்டைமான் சக்கரவர்த்தியின் திருப்பணிகள்:**


தொண்டைமான் சக்கரவர்த்திதான் முதன்முதலில் திருமலையப்பனின் திருக்கோயிலை கட்டியதாக பவிஷ்யோத்தர புராணத்தில் 12ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடன் மலையப்பன் பல சமயங்களில் உரையாடியுள்ளதை புராணக்கதைகள் கூறுகின்றன. ஒருமுறை சக்கரவர்த்தியின் விரோதிகளால் அவருக்குத் தொல்லைகள் நேர்ந்தபோது, தன் சங்கு சக்கரங்களை அவருக்குத் தந்துவிட்டான். பிற்காலத்தில், இதனால் குழப்பங்கள் ஏற்பட்டு, அவற்றையெல்லாம் உடையவர் தான் தீர்த்து வைத்தார்.

தொண்டைமான் சக்கரவர்த்தி திருக்கோயிலைக் கட்டியது மட்டுமின்றி, பல திருப்பணிகள் புரிந்துள்ளார். ரமாபதியான திருமலையப்பன் திருவீதியுலாவிற்கான தேர், ஆபரணங்கள், ஆதி பிரம்மோத்ஸவம் கொண்டாடுவதற்குத் தேவையான பொருட்கள் என பல கைங்கர்யங்கள் புரிந்துள்ளார். திருமலையில் முதன் முதலில் திருமலையப்பன் கட்டளையிட, பிரம்மா தொண்டைமான் சக்கரவர்த்தியின் துணையுடன்தான் ஆதி பிரம்மோத்ஸவத்தை நடத்தியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

**பல்லவ அரசி சாமவை புரிந்த திருப்பணிகள்:**

திருமலையில் பஞ்சபேரர்கள் உள்ளனர். 1. த்ருவபேரம் (மூலமூர்த்தி), 2. உத்ஸவபேரம் (உத்ஸவ காலங்களில் வீதிஉலா மற்றும் கல்யாண உத்ஸவங்களை அனுபவிக்கும் மூர்த்தி), 3. ஸ்னபன பேரம் (உக்ரஸ்ரீநிவாஸ மூர்த்தி, எப்போதும் மூல மூர்த்தியுடன் கர்பக்கிருஹத்தில் இருப்பவர், வருடத்திற்கு ஒருமுறை கைசிக துவாதசியன்று வீதி உலா வருவார்), 4. கௌதுக பேரம் (போகஸ்ரீநிவாஸர், போகமூர்த்தி, சர்வாதிக ஸ்ரீநிவாஸர் என்று பல திருநாமங்களையுடைய இவர் திருமஞ்சனம், திருக்கண் வளர்தல் ஆகியவைகளை அனுபவிப்பவர்), 5. பலிபேரம் (கொலுவு மூர்த்தி, லேகக ஸ்ரீநிவாஸர் ஆகிய திருநாமங்களை உடைய இவர், தினமும் காலை தோமாலை சேவை முடிந்தவுடன் ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்து , முந்தையநாள் நடந்த உத்ஸவங்கள், அடியார்கள் நடத்திய திருவீதி உலாக்கள், வரவு, செலவு கணக்கு ஆகியவற்றைப் பார்வையிடுவார். மேலும், துவஜஸ்தம்பத்திலும், நான்கு மூலைகளிலும் பலி சாதிப்பதற்கு இவரே செல்வார்.

இவர்களுள் வெள்ளியிலான விக்ரகத்தை சாமவை என்னும் பல்லவ அரசி திருவிளங்கோயிலில் "மணவாளப் பெருமாள்" என்னும் திருநாமமிட்டு ப்ரதிஷ்டைச் செய்து, அவருக்கு வைரங்களாலான திருமுடி, முத்துக்களாலும், பவளங்களாலுமான ஆபரணங்கள், மகர கண்டிகைகள், மாலைகள், ஆரங்கள், திருவரைப் பட்டிகை, பாஹுவலயம், திருச்சந்தம், வளையல், காரை, பாதசலயம், ப்ரபை போன்ற பல



ஆபரணங்களை அளித்துள்ளார் என்பதை இக்கல்வெட்டுக் குறிப்பு கூறுகிறது.



“திருவேங்கட கோட்டத்துக் குடவூர் நாட்டு திருச்சோகினூர்த் திருவேங்கடத்து எம்பெருமான் அடிகளுக்கு எழுந்தருளிவித்த திருவிளங்கோயிற்பெருமான் அடிகளுக்கு சோழநாட்டுச் சோழனூர் உலகப் பெருமானார் வைத்த திருவிளக்கு முப்பதின் கழஞ்சு......”

(T.T. Ins. I Vol No. 1) என்பது திருவிளங்கோயில் திருச்சுகனூரில் இருந்ததென்பதற்குச் சான்று பகர்கின்றது. இக்கொடை கி.பி. 830–இல் அளிக்கப்பட்டது. பல்லவர் மரபில் வந்த சாமவை என்னும் அரசியாரும் திருச்சுகனூரில் அமைந்திருந்த திருவிளங்கோயிலில் உற்சவ மூர்த்தியாக வெள்ளியில் ஒரு திருமேனியை செய்வித்து அதற்கு மணவாளப்பெருமாள் என்றும் பெயரிட்டுப் பல மணிகளழுத்திய திருமுடி, திருக்கழுத்துமாலை, திருக்கரங்களுக்குரிய மணிப்பணிகள் யாவும் சாத்தி வேறு பிற தானங்களும் செய்துள்ளார் (T.T. Ins. Vol. 1 No. 8). இக்கொடை கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தொடக்கத்தே அளிக்கப்பட்டது.

மேலும், மணவாளப்பெருமாளின் தினப்படி பூஜைக்காகவும், பல உத்ஸவங்களுக்காகவும் நிலங்களை கொடையாக அளித்ததையும் கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன.

**தொடரும்...**

# ஸ்வாமி புஷ்கரணி (திருமலையான் திருக்குளம்)



அகிலாண்டத்தில் உள்ள அனைத்து தீர்த்தங்களுக்கும் ஸ்வாமியை போன்றது இத்தீர்த்தம். ஆதலால் இதனை ஸ்வாமி புஷ்கரணி எனலாம். இத்தீர்த்தத்தில் தீர்த்த ஸ்நானம் செய்பவர்களுக்கு சகல சித்திகளும் கிடைக்கும் என்பது ஐதீகம். சாளுவ நரசிம்மர் இக்குளத்தில் நீராழி மண்டபத்தை 1468 ஆம் ஆண்டு கட்டினார். இந்த புஷ்கரணியில் தான் திருமலையப்ப ஸ்வாமிக்கு ஆண்டுதோறும் பால்குண (பங்குனி) மாத பௌர்ணமியன்று நிறைவடையும் விதமாக தெப்போத்ஸவம் ஐந்து நாட்கள் விமரிசையாக நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் வருகின்ற வைகுண்ட ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி அருணோதய வேளை இந்த ஸ்வாமி புஷ்கரணிக்கு முக்கோட்டி நடைபெறும். அன்று திரிகரண சுத்தியுடன் ஸ்நானம் மேற்கொள்பவர்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் சர்வ பாபங்களிலிருந்தும் முக்தி கிட்டும். இந்த புஷ்கரணி கரையில் ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயம், அவருக்கு அபிமுகமாக ஈசான்ய மூலையில் கோனேடி கட்டு ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயம், ஸ்ரீவியாசராஜரின் வியாச ராஜ ஆக்னீக மண்டபம், ஆதிசங்கரரின் ஸ்தூபம் போன்றவற்றையும் காணலாம். தினமும் இப்புஷ்கரணிக்கு மாலை வேளையில் புஷ்கரணி ஆரத்தி அளிப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

# அரிய புவியியல் வளைவு

திருமலை கோயிலின் வாயு திசையில் அமைந்துள்ளது “சிலாதோரணம்” என்ற அபூர்வமான புவியியல் வளைவு. மிகவும் அழகிய மரங்கள் நிறைந்து இரு புறமும் அலங்கரித்த அடர்ந்த சாலையில் பயணம் செய்தால் சிலா தோரண வளைவு அமைந்துள்ள இந்த இடத்தை அடையலாம்.

இது ஓர் அபூர்வமான புவியியல் வளைவாகும். இந்தியாவில் மட்டுமின்றி ஐரோப்பா மற்றும் அமெரிக்க கண்டத்தில் இத்தகைய வளைவு அமைந்துள்ளது வியப்பானது. இது போன்ற வளைவுகள் உலகத்தில் இரண்டு இடத்தில்தான் உள்ளன. அவை அமெரிக்காவில் வானவில் வளைவு, இங்கிலாந்தில் டால்ட்ராடியன் படிக பாறைகளின் மேல் உருவாகிய வளைவு. இதன் வயது சுமார் 50 கோடி ஆண்டுகள் ஆகும் என்று புவியியல் வல்லுனர்கள் கணக்கிடுகின்றனர்.

இது பன்னெடுங்காலமாக இயற்கை அளித்த எதிர்ப்புகளை சமாளித்து நின்றுள்ளது. இவ்வளைவு பல்வேறு காலநிலைகளில் நிகழ்ந்த தீவிர வானிலை காரணங்களாலும், நீர் அரிப்பினாலும் உருவாகி இருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது. இதன் நீளம் 23 அடி, உயரம் 10 அடியாகும்.



காலநிலை மாறுபாட்டால் இப்பாறைகளுக்கு தேய்மானம் ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. முன்பொரு காலத்தில் தண்ணீர் மட்டம் அந்த தோரணத்திற்கு மேலே பாய்ந்தோடியிருக்கலாம் என எண்ணப்படுகிறது. திருவேங் கடமுடையான் ஆகாய மார்க்கமாக திருமலையில் முதன் முதலில் திருப்பாதங்கள் பதித்த இடம் நாராயணகிரியாகும். அவ்வாறாக தனது இரண்டாவது அடியை இந்த புவியியல் வளைவில் வைத்ததால் இது திருமலையான் தோன்றிய வளைவாகவே பக்தர்கள் நம்புகிறார்கள். பின்னர், ஸ்வாமி இங்கிருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள திருமலை கோயிலில் ஆனந்த நிலையத்தில் அர்ச்சாமூர்த்தியாக நின்று நமக்கு இன்றும் அருள் புரிந்து கொண்டிருப்பதாக புராணக் கதைகள் கூறுகின்றன. இவ்வரிய நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இவ்வளைவு இன்றும் நமக்கு பொக்கிஷமாக விளங்குகிறது என பக்தர்கள் நம்புகிறார்கள். இவ்விடத்திற்கு அருகேயுள்ள குன்றின் மீது எபார்சீயன் அசஹஜத என்னும் அரிய புவியியல் தோற்றம் அமைந்துள்ளது. இது நம் நாட்டிலுள்ள அரிய புவியியல் தோற்றங்களில் ஒன்று. இப்பகுதியின் கற்பாறைகளின் அமைப்புகள் சுமார் 250 கோடி ஆண்டுகள் பழமையானது என புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

– திருமதி எஸ். வைஷ்ணவி,
திருப்பதி.



# ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்

ஆங்கில மூலம் : திருமதி ஜெ.சி. ஞானபிரசுனா
தமிழ் வடிவம் : திருமதி பா.காயத்ரி,9744657115

ஆனந்த நிலையமாகிய திருவேங்கடமுடையானின் திருக்கோயில் அமைப்பை இக்கட்டுரையில் கண்டு அனுபவிப்போம்.

ஐதீகப்படி, ஸ்வாமி புஷ்கரணி தீர்த்தத்தின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீவராக ஸ்வாமியின் தரிசனம் பெற்ற பின்னரே ஏழுமலையானின் கோயிலுக்குச் செல்ல வேண்டும். (ஏனெனில் வராக ஸ்வாமிதான் பகவான் தங்க இடம்தர, அதற்கு உபகாரமாக பகவானும் வராக மூர்த்திக்கு முதல் தரிசனம், பூஜை மற்றும் நைவேத்தியம் செலுத்துவது என்று ஒப்பந்தமாயிற்று).

தற்போது, வைகானச ஆகமப்படி தினமும் பூஜை, அர்ச்சனை ஏற்கும் சுயம்பு மூர்த்தியான திருமலையப்பன் கோயிலின் அமைப்பை காண்போம்.

**முகத்வார கோபுரம் (முதன்மை நுழைவு வாயில்) :**

படி காவலி, சிம்ஹத்வாரம், பெரிய திருவாசல் என்று அழைக்கப்படும் இக்கோபுரமே கோயிலுக்குள் நுழைய முதன்மை வாயில். இக்கோபுரத்தை ஒட்டியே “மகா பிரகாரம்” அதாவது கோயில் சுற்று மதில் அமைந்துள்ளது.



**சங்கனிதி மற்றும் பத்மனிதி :**

முகத்வாரத்தின் நுழைவு வாயிலில் திருவேங்கடமுடையானின் செல்வத்தை காப்பவர்களான (பாலகர்கள்) சங்கனிதி மற்றும் பத்மனிதியின் பஞ்சலோக விக்ரகங்கள் உள்ளன.

**கிருஷ்ணராய மண்டபம் :**

ப்ரதிம மண்டபம் என்றழைக்கப்படும், 16 தூண்களையுடைய இம்மண்டபம், மகாத்வாரத்தை ஒட்டி அமைந்துள்ளது. கோயிலுக்குள் நுழையும் போது வலது புறத்தில் செம்பாலான ராஜா கிருஷ்ண தேவ ராயர், ராணி திருமலா தேவி மற்றும் சின்ன தேவியின் சிற்பங்கள் அமைந்துள்ளன.

**வேங்கடபதிராயுலு :**

முகத்வாரத்தின் இடது பக்கத்தில் சந்திரகிரியின் அரசரான வேங்கடபதிராயுலுவின் செம்பாலான சிலை அமைந்துள்ளது

**அச்சுதராயரும் அவருடைய ராணியும் :**

மேற்கூரிய சிலையின் அருகில் கருங்கல்லாலான ராஜா அச்சுதராயரும், ராணி வரதாஜி அம்மணியின் சிலையும் அமைந்துள்ளது. இந்த இரண்டு சிலைகளைத் தவிர மற்ற சிலைகளில் அவரவரது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்விஜய நகர ராஜாக்களின் சிலைகள் அவர்களது பக்தியினை காண்பிக்கிறது.


**கண்ணாடி மண்டபம்:**

ப்ரதிம மண்டபத்தின் வடக்கு திசையில் அயன மஹால் என்றும், தமிழில் கண்ணாடி அறை என்றழைக்கப்படும் இம்மண்டபத்தில்தான் தினமும் மதியம் 2.00 மணியளவில் டோலோத்ஸவம் நடைபெறுகிறது.





வேங்கடபதிராயுலு




ரங்க மண்டபம்

இம்மண்டபத்தின் சிறப்பு என்னவென்றால் இதன் நடுவிலுள்ள ஊஞ்சலில் பகவானை அமர வைத்தால் அதனைச் சுற்றியுள்ள பெரிய கண்ணாடிகளில் பகவானின் எண்ணற்ற ப்ரிதி பிம்பங்கள் பிரிதிபலிப்பதை காணலாம்.

**ரங்கநாயக மண்டபம்:**

கிருஷ்ணராய மண்டபத்தின் தெற்கு திசையில் அமைந்துள்ள இம்மண்டபத்தில்தான் ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமியின் உத்ஸவ மூர்த்தி வைக்கப் பட்டிருந்தது. இன்று இவ்விடத்தில்தான் வசந்தோத்ஸவம், பிரம்மோத்ஸவம், வாகனசேவைகள் மற்றும் உயர் அதிகாரிகளை அமரவைத்து ஆசிர்வாதமும் பிரசாதமும் வழங்கப்படுகிறது.



அச்சுதராயர்



திருமலைராய மண்டபம்

**திருமலைராய மண்டபம்:**

அன்ன ஊஞ்சல் மண்டபம் (அன்னப் பறவை) என்றழைக்கப்படும் இம்மண்டபம் ரங்க நாயக மண்டபத்தின் அருகில் மேற்கு திசையில், உயர்ந்த தூண்களுடன் காட்சியளிக்கும். இம்மண்டபம் திரு மலை ராயராலும், மண்டபத்தின் மேடை சாலுவ நரசிம்ம ராயராலும் நிறுவப்பட்டதாகும். இங்குதான் பிரம் மோத்ஸவத்தின்போது துவஜாரோஹணம் அன்று உற்சவ மூர்த்திக்கு பூஜை நடைபெறும்.



துலாபாரம்

**துலாபாரம்:**

திருமலைராய மண்டபத்தில் இருக்கும் இந்த துலாக்கோலில்தான் பக்தர்கள் வேண்டுதலுக்கேற்ப நாணயம், வெல்லம்... முதலியவை சமர்பிப்பார்கள்.



ராஜா தோடர்மால், அவரது தாய் மற்றும் மனைவி

**ராஜா தோடர்மால்:**

திருமலைராய மண்டபத்தின் தெற்கு திசையில் ராஜா தோடர்மால், அவரது தாய் மோகனா தேவி, மனைவி பிதாபீபி ஆகியோரின் பஞ்சலோக சிலைகள் உள்ளன. இந்த ராஜாதான் திருமலைக் கோயிலை இஸ்லாமியர் மற்றும் ஆங்கிலேயர்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றியவர்.



அயன மண்டபம்



ஸ்ரீவாரி கல்யாண மண்டபம்

**நான்கு கால் மண்டபங்கள்:**

சம்பங்கி ப்ரதக்ஷிணத்தின் போது வரும் நான்கு மூலைகளிலும் 1470ஆம் ஆண்டு சாலுவ நரசிம்மராயரால் கட்டப்பட்ட இம்மண்டபங்களில்தான் திருவீதி யுலாவின் போது உத்ஸவ மூர்த்திகளுக்கு பூஜை செய்யப்பட்டது.





துவஜஸ்தம்பம்



பலிபீடம்



வெள்ளி வாயில்

**சம்பங்கி ப்ரதக்ஷிணம்:**

முகத்வார கோபுரம் மற்றும் படிகாவலி ப்ரகாரத்தின் நடுவே அமைந்து உள்ள வழியே சம்பங்கி ப்ரதக்ஷிணம் என்றழைக்கப்படுகிறது. சம்பங்கி மரங்கள் இங்கு இருந்தனவாம்.

**ஸ்ரீவேங்கடரமண கல்யாண மண்டபம்:**

சம்பங்கி ப்ரகாரத்தில் அமைந்துள்ள இம்மண்டபத்தில்தான் விசேஷ பூஜை, நித்ய பூஜை, நித்ய கல்யாணோத்ஸவம், பவித்ரோத்ஸவம், புஷ்பயாகம், ஜ்யேஷ்டாபிஷேகம் உள்ளிட்ட ஆண்டு விழாக்கள் நடைபெறுகின்றன.

**துவஜஸ்தம்பம்:**

வெள்ளி வாயிலின் எதிரில் கிழக்கு முகமாக தங்க துவஜஸ்தம்பம் அமைந்துள்ளது. பிரம்மோத்ஸவத்தின் போது இந்த துவஜஸ்தம்பத்தில்தான் கருடக்கொடி ஏற்றப்படுகிறது.

**பலி பீடம்:**

துவஜஸ்தம்பத்தின் கிழக்கு திசையில் கல்லால் செதுக்கப்பட்டு, தங்க முலாம் பூசி செப்புத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்ட பலிபீடம் காட்சி தருகிறது. பகவானுக்கு நைவேத்தியம் சமர்ப்பித்தபின், எஞ்சியதை இதன் மேல் வைப்பர். யக்ஷர் கள் மற்றும் பூதங்களால் சாப்பிடப்படுகிறது என்பது நம்பிக்கை.

**விரஜா தீர்த்தம்:**

வைகுண்டத்தில் ஸ்ரீஹரியின் பாதங்களின் கீழ் ஓடும் நதி என்று கருதப்படும் விரஜா நதியே சம்பங்கி ப்ரதக்ஷிணத்தில் உள்ள இத்தீர்த்தக் கிணறு.

**உக்ராணம் :**

உக்ராணம் என்பது பொருட்கள் சேமிக்கும் இடமாகும். ஸ்வாமியின் பூஜைக்கும், அபிஷேகத்திற்கும் தேவைப்படுகின்ற பொருட்களை இங்கிருந்து தான் கொண்டு செல்வர்.

**மடைப்பள்ளி (சமையலறை):**

பிரசாதம் தயாரிக்கப்படும் இவ்வறை/இம்மண்டபம் சம்பங்கி ப்ரதக்ஷிண வழியில் உள்ள உக்ராணத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது.

**பூக்கள் (பூல) அறை மற்றும் பூ கிணறு (பூலபாவி):**

யமுனைத்துறை என்றழைக்கப்படும் மடைப்பள்ளிக்கு அருகிலுள்ள இவ்வறையில்தான் பூஜைகளுக்குத் தேவையான பூக்களும் மாலைகளும் சேகரிக்கப்படுகிறது. இவ்விடத்தினை யமுனைத்துறை என்பர். பூக்கள் அறைக்கு எதிரிலுள்ள கிணற்றில் தான் ஸ்வாமிக்கு உபயோகிக்கப்பட்ட பூக்களும், மாலைகளும் போடப்படுகிறது.

**வகபடி அறை:**

பூக்கள் அறையின் அருகில் கிழக்கு திசையில் 1939ஆம் ஆண்டில் நிர்மானிக்கப்பட்ட இவ்வறையில் பிரசாதங்கள் சேகரிக்கப்பட்டு விற்பனை மையத்திற்கு அனுப்பப்படுகிறது.

**வெண்டி வாகிலி (வெள்ளி வாயில்):**

இது துவஜஸ்தம்பத்திற்கு அடுத்ததாக வெள்ளித் தகடுகளால் பதிந்த வாசல்.

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 49

**இடமிருந்து வலம்**

1. திருமாலை போற்றிய தெலுங்கு கவி பதகவிதை பிதாமகர் .....(6)
5. பிரம்மோற்சவத்தின் 7ம் நாள் இரவு...(4) பிரபை வாகனம்.
6. பிரம்மோற்சவத்தின் 5ம் நாள் இரவு ....(3) வாகனம்.
12. கண்ணாடி மண்டபத்தின் பெயர்... ....(3) மகால்.
13. தினசரி சுப்ரபாத சேவைக்குப் பிற கான புஷ்ப அலங்கார சேவை....(3)
15. பிரம்மோற்சவத்தின் 8ம் நாள் இரவு .....(3)வாகனம்.
19. திருமலை க்யூ கட்டிடத்தொகுதி யின் பெயர்....(5)
25. மடைப்பள்ளி தாயார்.....(3) மாதா.
26. பஞ்சாங்கம் ஓதி வரவு செலவு கணக்குகளை ஒப்பித்தல்...(3)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | ■ | 2 | ■ | | 3 | ■ |
| | 4 | ■ | | 5 | | | | ■ | 6 | | |
| | | ■ | 7 | 8 | | | | | | | 9 |
| | | | 10 | | | | | | | | |
| | | ■ | ■ | | | | | | 11 | | ■ |
| | ■ | 13 | | | | | | | ■ | | |
| | | 14 | ■ | ■ | 15 | 16 | | | 17 | | |
| | ■ | 18 | 19 | | | | | 20 | ■ | | |
| | 21 | | ■ | | | | | | | 22 | |
| | | | | | 23 | | | | | | 24 |
| | | | 25 | | | ■ | 26 | | | ■ | |
| 27 | ■ | | 12 | | | ■ | | | | | 28 |

தொகுப்பு :
திரு. டி.ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய 42ம் பக்கம் பார்க்கவும்...

**வலமிருந்து இடம்**

9. திருமலை ஆதிசேஷன் வடிவில் உள்ளதால்...........(5)
10. திருமலை எங்கும் ஒலிக்கும் திவ்ய கோஷம்........(4)
14. பிரசித்திப் பெற்ற பிரசாதம் ......(3)
17. பிரம்மோற்சவத்தின் 8ம் நாள் காலை.........(2) வாகனம்.
22. அஞ்சனா தேவி தவமிருந்த மலை...(7)
23. .........(6)மலையில் ஆதிசேஷனும் வாயு பக வானும் பலப்பரிசோதனை செய்தனர்.
24. கருடாழ்வாரை குறிக்கும் மலை .......(6)
28. வேதங்களைக் குறிப்பதால் இம்மலை ........(5)

**மேலிருந்து கீழ்**

1. வயிறு நிறையச் செய்யும் கைங்கர்யம் .........(6)
2. பிரம்ம தேவனால் துவக்கப்பட்ட விழா....(8)
3. அசுரன் விருஷன் மோட்சமடைந்த மலை .....(6)
4. இரவு நடைபெறுகின்ற பவளிம்பு .....(4)சேவை.
8. விண்ணோர்–மண்ணோர் துதிக்கும் மலை......(4)
9. பிரம்மோற்சவத்தின் முதல் நாள் ....(2)வாகனம்.
18. தி.தி.தி.யின் ஆன்மீக பத்திரிகை......(5)
21. பிரம்மோற்சவத்தின் 5ம் நாள்.....(3) அவதாரம்.

**கீழிருந்து மேல்**

6. பிரம்மோற்சவ 4ம் நாள் இரவு ....(2) வாகனம்.
7. பிரம்மோற்சவ 3ம் நாள் காலை .....(3) வாகனம்.
11. 2ம் நாள் இரவு பெருமாளின் வாகனம்.....(3)
15. பிரம்மோற்சவ 6ம் நாள் காலை ....(5) வாகனம்.
16. விடியற்காலை நடைபெறுவது...(5) சேவை.
20 பிரம்மோற்சவ 6ம் நாள் இரவு ....(5) வாகனம்.
22. திருமலையின் முதன்மை நுழைவு வாயில்....(4)
27. திருமலையின் 2ம் நுழைவு வாயில்....(6)
28. பாவங்களைப் போக்கும் மலை .....(7)

# திருமலையில் பூர்வாசார்யர்கள் கைங்கர்யம்

***“வானார் சோதி பகல் விளக்குப் பட்டிருக்கும்; நீலாழிச்சோதி கடல் கொண்டு கிடக்கும்; வேங்கடத்து எழில்கொள் சோதி குன்றத்திட்ட விளக்காயிருக்கும்”*** என்பர் நம்பிள்ளை என்னும் ஆசார்யர். பரமபதத்தில் நித்யமாய் இருக்கும் நித்யசூரிகளும், இங்கிருந்து சென்ற முக்தர்களும் ஸ்ரீமந்நாராயணனுடைய சோதியை – மேன்மையை அனுபவித்துக் கொண்டு இருப்பர். இது பகலில் விளக்கு போலே இருக்கும். நீலாழியான திருப்பாற்கடலில் உள்ள எம்பெருமானை எப்போதும் வணங்குபவர்கள் ஸனகர் முதலான ஏழு ருஷிகளாவர். இது அவர்கள் தங்கியுள்ள திருப்பாற்கடலுக்குள் பிரகாசிப்பதாகும் – கடலாலே கொள்ளப்பட்டு இருக்கும். மற்றவர்கள் சேவிக்க முடியாது. ஆனால் அலர்மேல்மங்கை உறை மார்பனான வேங்கடவனுடைய ஸ்வரூப, ரூப, குணங்கள் பிரகாசிக்கும்படி வேங்கடம் என்ற குன்றின் மேல் இட்ட விளக்காக உலகெங்கும் பிரகாசிக்கும் – குன்றத்திட்ட விளக்காயிருக்கும் என்றபடி.

இத்தகைய பெருமை பெற்ற திருமலையப்பனை நம்மாழ்வார் தாம் அருளிய திருவாய்மொழி மூன்றாம் பத்தில் ***“ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்”*** என்று பாரிக்கிறார். மேலும், ***“புகலொன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே”*** என்று சரணாகதி செய்தார். இவ்வாறு நம்மாழ்வாருடைய பாரிப்பை நிறைவேற்றும் வகையில் அவர் ஸம்பந்த பரம்பரையில் வந்த ஸ்ரீமந்நாத முனிகள் தொடக்கமான நம் பூர்வாசாரியர்கள் இந்த திவ்ய தேசத்தில் மிக்க பற்றுடையவர்களாய், சில ஆசார்யர்கள் யாத்ரை செய்தும் மற்றும் பல அளப்பரிய கைங்கர்யங்கள் செய்தும், அவை இன்றளவும் தொடர்ந்து வருவதைக் காணலாம்.

அந்த வகையில் முதல் ஆசார்யரான ஸ்ரீமந்நாதமுனிகள் வடநாட்டு யாத்ரையில் முதலில் அலர்மேல்மங்கை உறைமார்பனைத் திருமலையில் சேவித்தார் என்று ப்ரபந்நாம்ருதம் என்ற நூல் கூறும்.

**ஆளவந்தார் (916-1042) :**

ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருப்பேரனாரான யமுனைத்துறைவன் என்னும் ஆளவந்தார் திருமலைக்கு வந்து ஒரு சிறு குடில் அமைத்துக் கொண்டு, பூந்



- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 98418 84972.



தோட்டம் அமைத்து அதிலுள்ள மலர்களைத் தொடுத்துப் பெருமாளுக்கு சமர்ப்பித்து வந்தார் என்று ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸமாலை தெரிவிக்கிறது. பிற்காலத்தில் திருமலை அனந்தாழ்வான் என்னும் ஆசார்யர் ஆளவந்தார் மலர் களைத் தொடுத்த இடத்தை யமுனைத் துறை மண்டபம் என்று பெயரிட்டு, புஷ்ப மாலைகளைத் தொடுத்து பெருமா ளுக்கு சமர்ப்பித்து வந்தார். இன்றளவும் அம்மண்டபத் திலிருந்து தான் தோமாலை சேவைக்கு மாலைகளை ஜீயர் அல்லது ஏகாங்கிகள் எழுந்தருளிச் செல்வர்.



**திருக்கச்சி நம்பிகள் :**

ஆளவந்தார் சீடரான திருக்கச்சிநம்பிகள் திருமலையப்பனுக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்ய எண் ணினார். திருமலையானது குளிர்ந்த ப்ரதேசமாகையால் எம்பெருமான் திருவுள்ளத்துக்கு ஏற்ப இந்த கைங்கர்யம் தொடர்ந்து செய்ய முடியவில்லை.

**பெரிய திருமலை நம்பி (10 ஆம் நூற்றாண்டு) :**

ஆளவந்தாருடைய சீடரான பெரிய திருமலை நம்பிகள் அவரிடம் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்கும் போது "ஒழிவில் காலம்" என்ற பதிகத்தில் ''சுமந்து மாமலர் நீர்சுடர் தூபம் கொண்டு அமர்ந்து வானவர் வானவர்கோனொடும் நமன்று எழும் திருவேங்கடம் நங்கட்கு சமன்கொள் வீடு தரும் தடங்குன்றமே'' என்று ஆழ்வார் பாடியதற்கு ஏற்ப, ஆளவந்தார் கட்டளைப்படி திருமலைக்கு எழுந்தருளி பாபவிநாச தீர்த்தத்திலிருந்து திருமஞ்சனம் கொண்டு வந்தார். பின்னர் சில காலம் கழித்து வேங்கடவன் நியமனத்தாலே ஆகாச கங்கை யிலிருந்து தினந்தோறும் திருமஞ்சனம் கொண்டு வந்து சமர்ப்பித்துப் பெருமாளை மகிழ்வித்துக் கொண்டு வாழ்ந்து வந்தார் என்பர். தாத்தா என்று இவரை மலையப்பன் அழைத்தபடியால் இவருடைய ஸந்ததியருக்கு தாதாசார்ய வம்சத்தவர் என்று பெயர். இன்றளவும் அந்த வம்சத்தவர்கள் தினமும் ஆகாசகங்கையிலிருந்து



# திருமலையான் திருஉண்டியல்

திருமலைக்கோயிலில் உண்டியல் 25-07-1821 அன்று முதன்முதலில் நிறுவப்பட்டது. 25-07-1825 முதல் அதை "சிரி கொலுவு" என்று அழைத்தனர். பித் தளை கங்காளம் வடிவம் கொண்ட ஓர் பாத்திரத்தை (கொப்பரை) வெள்ளை நிறத்துணியின் அடியில் ஒன்பது அடி நீளம் இருக்கும்படி இறக்குவர். 75 கிலோ எடையுள்ள இக்கொப்பரை 2016-ல் முதன்முறையாக திரு.கே.சுரேஷ் அவர்களால் வழங்கப்பட்டது. அவரே 04-07-2017-ல் மற்றொரு கொப்பரையை வழங்கினார். தற்பொழுதுள்ள கொப்பரை கீழ்கண்ட முறையில் தயாரிக்கப்படுகிறது.

உண்டி தயாரிக்க, அடித்தளத்திற்கும், காது வளையத்திற்கும் பித்தளை உலோகத்தையும், சுற்று புறபகுதி முழுமைக்கும் செம்பு உலோகத்தையும் பயன்படுத்தப்படுகிறது. உண்டியலின் அளவு 25" (அ) 27'' மற்றும் அடிபாகம் சுற்றளவு உயரம் 25'' அல்லது 27'' இருக்கும். ஒவ்வொரு உண்டியலுக்கும் '91/4' மீ. வெள்ளை துணியும் 40 உண்டியலுக்கு 6 மீ. மஞ்சள் துணியும், 60 உண்டியலுக்கு ஊர்த்தவ புண்டரம் (திருநாமம்) தயார் செய்வதற்கு 60 மீட்டர் சிவப்பு துணியும் தேவைப்படுகிறது.

தொகுப்பு : திரு. கே. சுரேஷ்



தீர்த்தக் கைங்கர்யம் செய்து வருவது குறிப்பிடத்தக் கதாகும்.



**இராமாநுசர் (1017-1137) :**

இராமாநுசர் திருமலைக்கு மூன்று முறை எழுந்தருளினார். முதல் முறை தம்முடைய மாமாவான பெரிய திருமலை நம்பியிடம் இராமாயணம் பாடம் கேட்கச் சென்றார். அப்போது திருமலை அடிவாரத்தில் தங்கி இருந்து ஓராண்டு காலம் இராமாயண பாடத்தை அறிந்தார். இரண்டாவது தடவை சைவர்களும் வைணவர்களும் திருவேங்கடவனைத் தம் தம் தெய்வமாக எண்ணி வாதம் செய்த போது அப்பனுக்குத் திருவாழி, திருச்சங்குகளைக் கொடுத்து விஷ்ணு என்று நிரூபித்தார். மேலும், பல திருத்தங்களைச் செய்தார்.

திருமலையின் வளர்ச்சிக்கும், திவ்யமான ஐச்வர்யத்தின் வளர்ச்சிக்கும் ஏற்ப உற்சவ மூர்த்தியாகப் பூஜிக்கப்பட்டு வந்த வேங்கடத்துறைவர் என்னும் மலைக்கினிய நின்ற பெருமாளை மாற்றி, நித்ய அர்ச்சா மூர்த்தியாக ஆராதிக்கப்பட்டு வருகின்ற மலையப்பனை உற்சவமூர்த்தி இடத்தில் ப்ரதிஷ்டை செய்வித்தார்.

அவர்களுக்குச் சாஸ்த்ர முறைப்படி திருவாராதனத்தைச் செய்து வைத்தார். வைகானச ஆகமப்படி அழகப்பிரானார் தான் தினமும் சயன மூர்த்தியாக இருந்தார். மார்கழி மாதம் முப்பது நாளும் இரவில் ஏகாந்த சேவையில் கண்ணனை சயன மூர்த்தியாகக் கொள்ளும்படி செய்தார்.

*"த்விபுஜா வ்யூஹலக்ஷிமீ: ஸ்யாத் பத்த பத்மாஸநப்ரியா| ஶ்ரீநிவாஸாங்கமத்யஸ்தா ஸுதாரம் கேசவப்ரியா||"* என்று வராக புராணத்தில் சொல்லியபடியே திவ்ய ஐச்வர்யம் வளர்வதற்காக இராமாநுசர் இரண்டு கைகளோடு கூடிய ஒரு வியூஹ லக்ஷ்மியை மூலவர் திருமார்பில் பங்குனி மாதம் சுக்ல துவாதசி வெள்ளிக்கிழமை மஞ்சரிகா யோகத்தில் பிரதிஷ்டை செய்வித்தார். தினமும் தோமாலை சேவையின் போது திருவேங்கடவன் தம்முடைய விஜய பரம்பரைகளுக்கு முக்கிய ஸாதனமான திருவாழி, திருச்சங்கு முதலானவற்றுக்கு திருமாலைசாத்தின பிறகு திருமார்பு நாச்சியார், திருமுடி முதலான திவ்ய அவயவங்களுக்கும் திருமாலை சாத்தும் படி நியமித்தருளினார். இன்னும் பல பல கைங்கர்யங்களை செய்துள்ளார்.

## திருமலை நம்பி சன்னதி :



**திருமலை ஆலயத்தின் தெற்கு மாடவீதியில் திருமலை நம்பி சன்னதி அமைந்துள்ளது. சாக்ஷாத் திருவேங்கடமுடையானால் "தாத்தா" என்று அன்புடன் அழைக்கப்பட்டவரே திருமலை நம்பி ஆசார்ய புருஷர். ஆளவந்தார் அறிவுரையின்படி ஶ்ரீசைல பூர்ணரான திருமலை நம்பி, ஒவ்வொரு நாளும் திருவேங்கடவனின் தினசரி தீர்த்த கைங்கர்யத்திற்காக பக்தியுடன் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியை பாராயணம் செய்துகொண்டே பாபவிநாசனத்திலிருந்து தீர்த்தத்தினை பொழுது புலரும் முன்னரே கொண்டு வருவார். திருவேங்கடவன் வேடுவ சிறுவன் வடிவில் வந்து தனது பக்தரின் கஷ்டத்தை தீர்க்க, ஆகாச கங்கை என்னும் தீர்த்தத்தை உருவாக்கி, ஸ்வாமிக்கு இங்கிருந்து தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்தால் போதும் என்றும் கூறினார்.**

**இன்றும் திருமலை ஆலயத்தில் ஆகாச கங்கையிலிருந்தே ஸ்வாமிக்கு தீர்த்தக் கைங்கர்யம் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் அத்யயனோத்ஸவத்தின் இறுதி நாளன்று ஶ்ரீசைலபூர்ணரின் நினைவாக ஆகாச கங்கை உத்ஸவம் (தண்ணீரமுதோத்ஸவம்) நடைபெறுகிறது.**





முக்கியமாக பெரிய திருமலை நம்பி பரமபதித்த பின்பு திருமலை அனந்தாழ்வான் ஒருவரால் கோயில் நிர்வாகம் கஷ்டம் என்று எண்ணி, இராமாநுசர் முன்பே தம்மால் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவராக நியமிக்கப்பட்ட அனந்தாழ்வான் சீடரை, ஸ்ரீஸேனாபதி ஜீயர் என்று பெயரிட்டு த்ரிதண்ட காஷாயங்களைத்தந்து பூர்ண ஸந்யாஸியாக்கி திருமலையில் தம் மடத்தில் ஸ்தாபித்தருளினார்.

திருமலையப்பனுக்கு வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் என்று நம்மாழ்வார் பாரித்ததை நிறைவேற்ற அந்த ஜீயருக்கு ஸ்ரீசடகோப ஜீயர் என்று திருநாமம் சூட்டி, அவரிடம் திருவேங்கடவன், ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஸந்நிதிகள் பொறுப்பை ஒப்புவித்தார். இரண்டு கோயில் சாவிகளும் இரண்டு பெட்டியில் வைத்து ஸீல் வைத்து இரண்டு இடங்களிலும் இருக்கும் பெரிய ஜீயர் மடத்துக்கு அனுப்பப்பட்டு மறுபடியும் காலையில் ஸந்நிதி திறப்பதற்கு முன்னே பெரிய ஜீயர் ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்லும் போது எடுத்து செல்லப்படும். இப்படி இராமாநுசர் இட்ட கட்டளை இன்றும் நடந்து வருகிறது. இங்ஙனே பல.

**திருமலை அனந்தாழ்வான் (1053 முதல்... ) :**

மேல் நாட்டில் சிறுபுத்தூரில் அவதரித்தவர் அனந்தாழ்வார் என்னும் ஆசார்யராவர். இவர் இராமாநுசரிடம் சீடராக எண்ணி திருவரங்கத்துக்கு வந்தார். இராமாநுசரும் இவரை அருளாளப் பெருமாள் எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தார். இராமாநுசரின் திருவாய்மொழி காலக்ஷேபத்தில் *"ஒழிவில் காலமெல்லாம்"* பதிகத்தின் பொருளை அறியும் போது ஆழ்வார் அருளியபடியே திருமலைக்கு யாராவது போய் மலையப்பனுக்கு கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்க, அனந்தாழ்வான் தாம் செல்வதாக விண்ணப்பித்தார். உடனே இராமாநுசர் கட்டளைபடியே திருமலைக்குச் சென்று பெருமாளைச் சேவித்து, திருநந்தவனம் அமைத்து, குளம்







## திருமலையில் அனந்தாழ்வான் தோட்டம்

**இராமாநுஜரின் வழிகாட்டுதலின்படி அனந்தாழ்வான் தன் கர்ப்பிணியான துணைவியாருடன் திருமலைக்கு வந்து திருவேங்கடவனுக்கு சேவை புரிவதையே குறிக்கோளாகக் கொண்டவர். ஸ்ரீபத்மாவதி தாயாரால் தந்தை என அழைக்கப்பட்டவர். அனந்தாழ்வான் தோட்டம், தோட்டத்தில் அமைந்த மகிழ மரம், அனந்தாழ்வான் பிருந்தாவனத்தையும் இங்கு காணலாம்.**

**இத்தோட்டம் திருமலை ஆலயத்தின் தென் மேற்கு மாடவீதியில் அமைந்துள்ளது. பிரம்மோத்ஸவம் முடிந்த மறு நாள் "பாக்சவாரி" என்ற உற்சவத்தின் போது அப்பிரதக்ஷிணமாக திரு மலையப்ப ஸ்வாமி இங்கு எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிப்பது அனந்தாழ்வானின் சேவையை நமக்கு உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது.**



அமைத்து, முன்பு ஆளவந்தார் இருந்த இடத்தை யமுனைத்துறை மண்டபம் என்று பெயர் சூட்டி, தோட்டத்தில் மலரும் மலர்களை அம்மண்டபத்திற்கு கொண்டு வந்து மாலையைக் கட்டி திருவேங்கடவனுக்கு சமர்ப்பித்து வந்தார். திருமலையில் இருந்து கொண்டே திருவேங்கடவனுக்கு பல பல கைங்கர்யங்களைச் செய்து வந்தார்.




### ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் (1017-1097) :

ஒரு சமயம், ஆளவந்தாருடைய சீடரான திருவரங்கப்பெருமாள் அரையர் ஸ்ரீரங்கத்தில் திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் பெரிய பெருமாளைத் திருவடி தொழுது, எம்பெருமானாருடைய அனுமதி பெற்றுத் திருவேங்கடவனை சேவிக்க திருமலைக்கு எழுந்தருளினார். திருவேங்கடவனைத் திருவடி தொழுத போது பெருமாள் "வாரீர் அரையரே! நீர் நம் இராமாநுசனுக்கு திருவாய்மொழி ஆசார்யராகையாலே நமக்கு மிகவும் உகந்த விஷயமாயிருக்கிறீர். ஆகையால் செந்தமிழில் முதலாழ்வார்கள் கவியில் ஒரு கவி பாடும்" என்று அருளிச் செய்தான். அரையரும் முதல் மூன்று திருவந்தாதிகளில் முதல் பாட்டு முடிவு பாட்டுக்களையும் மற்றும் இரண்டு பாசுரங்களையும் தேவ கானத்தில் பாடி திருவேங்கடவனை உகப்பித்தார். தீர்த்த பிரசாதங்கள் கொடுத்தருளினான். அப்போது அங்கிருந்த பெரிய திருமலை நம்பிகளும் திருமலை அனந்தாழ்வானும் மறுநாள் முதல் நடக்கும் அத்யயன உற்சவத்தில் ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களை திருவேங்கடவன் செவிசாத்த தேவகானத்தில் பாடி அருள வேணும் என்றனர். அரையரும் இது திருவேங்கடவன் நியமனம் என்று மறுநாள் வந்து பாடி உகப்பித்தார்.

### மணவாளமாமுனிகள் (1370-1443) :

பூர்வாசார்யர்களுள் கடைக்குட்டியான ஆசார்யர் மணவாள மாமுனிகள் ஆவர். தம்முடைய ஆசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையிடம் திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களையும், திருவாய்மொழிக்கு அமைந்த வ்யாக்யானங்களையும் கசடறக் கற்றவர். பகவத் விஷயத்தை நம்பெருமாள் காலக்ஷேபமாக ஒரு வருட காலம் ஸ்ரீரங்கத்தில் கோயிலில் நடத்தி, நம்பெருமாள் உகந்து தம் ஆசார்யரான மாமுனிகளுக்கு ஒரு தனியனையும் இயற்றினார். மாமுனிகள் திருவேங்கடவனை தரிசிக்க திருமலைக்கு வர, திருப்பதியில் வேறு மதத்தவர்களால் உபத்ரவம் வராதபடி கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் போலே நிக்ரஹ அநுக்ரஹத்துக்கு ஸமர்த்தரான ஒரு ஜீயரை நியமிக்க வேணும் என்று எண்ணி தம்முடைய சீடர்களான எண்மரில் ஒருவராய் ராஜவல்லபராய் பகவத் கைங்கர்யத்தில் ஊற்றமுடையவரான ஒருவருக்கு திருவேங்கட ஜீயர் என்று திருநாமம் சாத்தி அப்போதுள்ள அரசனிடம் அனுமதி பெற்று அவரை இளைய கேள்வி ஜீயராக்கித் திருப்பதியில் மடமும் கட்டிக் கொடுத்து அவரை இராமாநுசர் பரம்பரையான பெரிய கோயில் கேள்வி அப்பன் ஜீயருக்குத் துணையாக இருந்து எல்லா நிர்வாகத்தையும் செய்து கொண்டிருக்கும்படி நியமித்தார். பெரிய ஜீயருக்கு








திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் திருவேங்கடமுடையானின் திருமோவாயில் வைக்கப்படும் பச்சைகற்பூரத்திற்கு காரணமான அனந்தாழ்வானின் கடப்பாரையை ஸ்வாமி ஆலயத்தின் முகத்துவாரத்தின் வலது புற வாயிலில் தொங்கவிடப்பட்டுள்ளது.

உட்பட்ட ஏகாங்கிகள் நால்வரில் யோக்ய தையுள்ளவர்கள் சிறிய ஜீயராக எழுந் தருளக்கடவர்கள் என்று கட்டளை இட்டரு ளினார். பெரிய ஜீயர் மடத்தை ஏற்படுத் திய இராமாநுசரே அம்மடத்தில் முதல் ஜீயராவர். அவரால் ஏற்படுத்தப்பட்ட சடகோப ஜீயர் இரண்டாமவராவர்.



மணவாளமாமுனிகளால் ஏற்படுத்தப்பட்ட சிறிய ஜீயர் பன்னிரண்டாவது பெரிய ஜீயராவார். பெரிய ஜீயர் மடத்தில் மாமுனிகளும் பதினொன்று பன்னிரண்டாம் ஜீயர்களுக்கு இடையில் பெரிய ஜீய ராக இருந்ததாகவும் கூறுவர். இன்றளவும் வாழையடி வாழையாக அவிச்சிந்நமாக பெரிய ஜீயர், சிறிய ஜீயர் ஸ்வாமிகள் வழிவிலா அடிமை செய்து வருவது காண லாம். திருமலையில் ஜீயர்களுக்கு திருமஞ்சனம், உள்ளே திவ்யப்ரபந்த கோஷ்டி தொடக்கம், நித் யோற்சவ, பஞ்சபர்வ புறப்பாடுகள் பிரம்மோற்சவம் திவ்யப்ரபந்த கோஷ்டி முதலானவற்றின்போது ஏற் பட்ட பல்வேறு கைங்கர்யங்களில் குறிப்பாக சாத்து முறைக் காலங்களில் பெரிய ஜீயர் திருத்துழாய் கொடுக்க அதை வாங்கி அர்ச்சகர்கள் சாத்து முறை முடியும்வரை பெருமாள் திருவடிகளிலே சேர்த்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய ஜீயர் ஸ்வாமிக்கு அருளிச்செயல் சேர்த்துக் கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய ஜீயர் ஸ்வா மிக்கு அருளிச் செயல் அத்யாபாகத் தலைமையும், தர்மகர்த்ருத்வமும் உண்டு. சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு செய்யும் அத்தாணிச் சேவகம் என்ற கைங்கர்யங்களும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுக் கெல்லாம் ஸன்மானமாக வேங்கடக்கோன் தானு மிழும் பொன் வட்டிலிலிருந்து கோஷ்டியில் முதல் தீர்த்த மரியாதையும் மற்ற பகுமானம் முதலான வைகளும் உண்டு. இவை அனைத்தும் இராமாநு சருக்கு இருந்தபடியால் அவருடைய பரம்பரையில் வந்த பெரிய ஜீயருக்கு தந்தை வழி சொத்தான கைங்கர்யமாக அநுபவத்தில் இருந்து வருகிறது இப்படிப் பட்ட பெருமைகளும் பெற்ற ஜீயர் ஸ்வாமி இவர் ஒருவரே. வேறெங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை என்று பெரியோர் பணிப்பர். இராமாநுஜரால் ஏற்பட்ட இந்த கைங்கர்யம் திருமலை திருப்பதி கோயில் களில் பெரிய ஜீயர், சின்ன ஜீயர், ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களால் இன்றளவும் நடைபெற்று வருவது காணலாம்.

### ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா (1361-1454) :

மணவாளமாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா என்னும் ஆசார்யராவர். ஒரு சமயம் மணவாளமாமுனிகள் திருமலை விஜயம் செய்தபோது திருமலை அப் பனை வணங்கிய பிறகு அண்ணாவிடம் திருவேங் கடவனுக்கு ஸுப்ரபாதம் இயற்றச் சொன்னார். மாமுனிகள் கட்டளையை ஏற்று அண்ணாவும் உடனே திருவேங்கடவனுக்கு ஸுப்ரபாதம், ப்ரபத்தி, ஸ்தோத்ரம், மங்களாசாசனம் என்று நான்கு ஸ்தோத் ரங்களை அருளினார். மாமுனிகளும் உகந்து அவற்றை திருமலையில் மார்கழி மாதம் நீங்கலாக தினமும் கோயிலில் திருக்காப்பு நீக்கும்போது அநு ஸந்திக்கும் படி நியமித்தார். அது இன்றும் நடந்து வருவது காணலாம்.

இவ்வாறு பூர்வாசாரியர்கள் ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமாக ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா ஈறாக பல பல ஆசார்யர்கள் திருவேங்கடவனுக்கு ஆழ்வார் பாரித்தபடியும், இராமாநுசர் ஏற்படுத்திய கட்டளை கொண்டு பல பல கைங்கர்யங்கள் நடந்து வருவது காணலாம்.

## கோவிந்த நாம சங்கீர்த்தனம்

**கிருத யுகத்தில் தியானத்தாலும், திரேதா யுகத்தில் யாகத்தாலும், துவாபர யுகத்தில் அர்ச்சனையினாலும் கிடைத்த பகவானின் அருள்... இந்தக் கலியுகத்தில் மிகவும் எளிமையான நாம சங்கீர்த்தனம் செய்தாலே பெற்று விட முடியும்" என்று ஸ்ரீமத் பாகவதத்தில் சுகப்பிரம்ம மகரிஷி பரிக்ஷீத் மன்னருக்கு விளக்கினார். "கோவிந்தா...! கோவிந்தா...! என்று இறைவன் நாமாவளியைச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும், கோடி புண்ணியம் நமது கணக்கில் சேரும்!**




# மஹந்துக்கள் கால திருமலை

திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி, 9440120758

கலியுகத் தெய்வமான திருவேங்கடவனின் திருக்கோயிலின் நிர்வாகம் தொண்டைமான் காலம் தொட்டு அடுத்தடுத்து வந்த மன்னர்கள், அவர்களின் பிரதிநிதிகள் என்று வழி, வழியாக வந்து தற்போது திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பொறுப்பில் இருந்து வருகிறது. இவற்றின் மத்தியில் சுமார் தொன் னூறு வருட காலம் அதாவது 1843ஆம் வருடம் முதல் 1933 வரை மஹந்துக்கள் எனும் பாவாஜிகள் (பைராகி கள்) பொறுப்பில் இருந்து வந்திருக்கிறது. அதைப்பற் றிய சிறு தொகுப்பை இந்த கட்டுரையில் பார்ப்போம்.

இதில் நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் திருவேங்கடநாதனின் பிரியத்துக்குப் பாத்திர மான பக்தர் ஹாதிராம் பாவாஜி பற்றியது. இவர் தான் முதல் மஹந்து. இவர் ஸ்தாபித்த மஹந்து மடம் தற் போதும் திருமலையிலும், கீழ் திருப்பதியி லும் உள்ளது. திருமலை திருக்கோயிலின் பிரதான வாயி லுக்கு, தெற்குப் புறமாக உள்ள அந்த மடத்தின் மேல் இந்த பக்தரான ஹாதிராம்ஜி பாவாஜி யும், நமது திருவேங்கட முடையானும் எதிர் எதிரே அமர்ந்து பகடை (அதாவது தாயம்) விளையாடிக் கொண்டிருக்கும் சித்திரம் அனைவரின் கண்களையும் ஆச்சரியப்பட வைக்கும்.

வடமாநிலத்தைச் சேர்ந்த இந்த பாவாஜி ஒரு முறை திருமலைக்கு யாத்திரையாக வந்தார். அவர் ஒரு பைராகி. அவரை எல்லோரும் "பாவாஜி" என்றே அழைப்பது வழக்கம். இவர் ஒரு சிறந்த ஸ்ரீராம பக்தர். முதன் முதலாக ஆனந்த நிலைய வாச னைத் தரிசித்ததும் மெய்சிலிர்த்துப் போன இவர் கண்களுக்குத் திருவேங்கடமுடையான் ஸ்ரீராமனாகவே தெரிந்தாராம். அந்த இடத்தை விட்டு நகரவே இவர் கால்கள் எழும்பவில்லை. அந்த அளவு பகவானோடு ஒன்றிப்போனவர் திருமலையிலேயே இருக்க முடிவு செய்தார். காலையும், பகலும், இரவும் என்று எத்தனை முறை தரிசித்தாலும் இவருக்குத் திருப்தி ஏற்படவில்லையாம். ஆகவே கோயிலுக்கு அருகிலேயே ஒரு மடத்தை ஸ்தாபித்து அதில் இருந்து கொண்டே பக வானை தினமும் மூன்று முறை தரிசிப்பதோடு, நின்ற இடத்திலேயே வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண் டிருப்பதைப் பார்த்து, கோயிலில் உள்ள அர்ச்சகர்கள் முதற் கொண்டு அனைவருக்கும் இவர் மேல் சந்தேகம் ஏற்பட, இவரை மறுநாள் முதல் கோயிலுக்குள் நுழையாமல் தடுத்தனர். மனம் நொந்தவராய் இவர் எம்பெருமானிடம், நான் செய்த தவறு என்ன? எனக்கு உன் தரிசனம் மறுக்கப்பட்டது ஏனென்று கண்களில் நீர் வழிய பிரார்த்தாராம். பின்பு ஒருவாறு மனம் தேறியவராய் எம்பெருமான் தன் எதிரிலேயே இருப்பதுபோல பாவித்துக் கொண்டு தாய பலகையை விரித்து,



# திருமலைக்கு மலைவழி பாதைகள்


**நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வரும் பக்தர்கள் திருமலையை சென்றடைய நான்கு முக்கிய பாதைகள் உள்ளன. அவை முறையே திருப்பதியிலிருந்து திருமலைக்கு செல்பவர்களுக்கு, அலிபிரியிலிருந்து ஆனந்த நிலையம் வழி, இரண்டாவது ஸ்ரீநிவாச மங்காபுரத்திலிருந்து ஸ்ரீவாரி மெட்டு அல்லது ஸ்ரீபதிவாரி மெட்டு மார்க்கம், மூன்றாவது பாக்ராபேட்டை – தேவர கொண்டா ஆரண்ய வழி, நான்காவது கடப்பா அருகில் மாமண்டூரிலிருந்து தொடங்கும் ஸ்வாமி பாதால (பாதங்கள்) வழி என்பதாகும்.**



தானும், பகவானும் பகடை விளையாடு வது போல நினைத்துக் கொண்டு இருவ ருக்காகவும் தானே தாயகட்டைகளை உருட்டி விளையாடத் துவங்கினார். இப்படியாக நாள் கழிந்து கொண்டிருக் கையில், ஒரு நாள் இரவு தூக்கத்தில் யாரோ இவரை "பாவாஜி!" என்று அழைப் பது போல தோன்ற, கண்களைத் திறந்து பார்த்தவர் திடுக்கிட்டுப் போனாராம். எதிரே நிற்பது திருமலைவாசனான திருவேங்கட முடையான்.

சாக்ஷாத் திருவேங்கடமுடையானே எதிரில் தரிசனம் தர பாவாஜியால் கண் களை நம்பமுடியவில்லை. "பாவாஜி! உம்மோடு பகடையாட வந்துள்ளேன். வாரும், இருவரும் ஆடலாம், என்றுரைக்க சாவி கொடுத்த பொம்மை போல தாயப் பலகையை பாவாஜி விரிக்க, இருவரும் விளையாடினார்களாம். இதில் பாவாஜி ஜெயித்துவிட எம்பெருமான், "உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும்" என்று கேட்டபோது, பாவாஜி மெய் சிலிர்த்தவராய் "எம்பெருமானே, உம் தரிசனம் கிடைத்தபின் எனக்கு இனி ஒன்றும் வேண்டாம். உமது திருவடி நிழலில் நான் எப்போதும் இருக்கின்ற பாக்யம் கிடைத்தால் போதும்" என்று அவரது திருப்பாதங் களில் விழ, பகவானும் அப்படியே ஆகட்டும் என்று வரமருளி மறைந் தாராம். நாட்கள் சென்றன. பகவான் லீலா வினோதனாயிற்றே! பக்தன் பாவாஜியின் மகிமை அனைவருக்கும் தெரிய வேண்டி ஒரு அற்பு தத்தை செய்தார்.

எம்பெருமான் ஒரு நாள் இரவு விளையாடி விட்டு போகும்போது தனது திருமார்பில் தவழும் இரத்தின மாலையை பாவாஜியின் மடத்தில் விட்டுவிட்டு ஆனந்த நிலையம் சென்று விட்டார். பகவான் மறைந்த பின், அதைக் கவனித்த பாவாஜி "அடடா, இது எம்பெருமா னுடையதல்லவா சரி. நாளை வரும்போது கொடுத்து விடலாம்" என்று அதை தனது பெட்டியில் வைத்தாராம். மறுநாள் காலை சன்னிதி திறந்ததும் அர்ச்சகர் எம்பெருமானின் திருமார்பில் அந்த ரத்னமாலை தென்படாமல் போகவே திடுக்கிட்டுப் போனாராம். எங்கு தேடியும் தென்படாமல் போகவே பயந்து கோயில் நிர்வாகத்திடம் தெரிவிக்க, அவர்கள் அங்குள்ள அனைவரையும் விசாரிக்க மாலை தென்பட வில்லை. அப்போது வேலையாட்கள் தினமும் பாவாஜி வந்து அதிக நேரம் சன்னிதியில் நின்று கொண்டிருந்ததை அதிகாரிகளிடம் தெரி விக்க, அவர்கள் பாவாஜியின் மடத்திற்குச் சென்றார்கள். காரணத்தை கேட்ட பாவாஜி உள்ளே சென்று பெட்டியிலிருந்து அந்த ரத்ன மாலையைக் கொண்டு வந்து, இதை நேற்றிரவு பகவான் இங்கே விட்டுச் சென்று விட்டார். இந்தாருங்கள் என்று கொடுக்க, அவர்கள் கேலியா கவும் கோபமாகவும் சிரித்தபடி. பகவான் இங்கு வந்து கொடுத்தாரா? யார் நம்புவது இந்த கதையை வா, அரசனிடம் சொல்லு என்று அவரை ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் சபையில் கொண்டு போய் நிறுத்தினார்கள். நடந்தது அத்தனை





யையும் ஒன்று விடாமல் பாவாஜி சொன்னபோது கிருஷ்ண தேவராயருக்கு அதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஆயினும், சபையில் உள்ள அனைவரும் இது கட்டுக்கதை என்று சொல்ல, மகாராஜா வேறு வழியின்றி பாவாஜியை சிறையில் அடைத்து விட்டு, அவர் முன்பாக மாபெரும் கரும்பு கட்டுகளை வைத்து விட்டு, விடிவதற்குள் முழுவதையும் தின்று தீர்க்க வேண்டும். நீ சொல்லும் பெருமாள் வந்து உனக்கு உதவுகிறாரா பார்க்கலாம் என்று கட்டளையிட, பாவாஜி செய்வதறியாமல் திகைத்தார். “எம்பெருமானே இந்த சோதனை எனக்குத் தேவைதானா? நான் உன்னைத் தரிசித்து கொண்டேயிருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனே தவிர வேறு என்ன பாவம் செய்தேன்” என்று கண்ணீருடன் பகவான் நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு பெரிய யானையின் பிளிறல் சிறைக்காவலர்களுக்குக் கேட்க, அவர்கள் சிறைக் கம்பிகளின் வழியாக பார்க்கும் போது, ஒரு யானை அந்த கரும்பு கட்டுகளை உண்பதை கண்டு திடுக்கிட்டு ஓடி, அரசரிடம் தெரிவித்தனர். அந்த யானை சாக்ஷாத் எம்பெருமானே என்பதை உணர்ந்த பாவாஜி இருகரம் கூப்பி சேவிக்க, அது தனது தும்பிக்கையால் அவரது தலைமீது ஆசிர்வதித்து விட்டு மறைந்து போனது. விஷய மறிந்து வந்த கிருஷ்ண தேவராயர் பாவாஜியிடம் மன்னிப்பு வேண்டியதோடு, அன்று முதல் அவரை ஹாதிராம்ஜி என்றே அனைவரும் அழைக்கத் தொடங்கினார்களாம். அவரை குருவாகக் கொண்ட சீடர்களின் கூட்டமும் அதிகமானது. இந்த மஹந்துகளின் பெருமையும் எல்லோருக்கும் புரியத் தொடங்கியது. திருமலை மட்டுமல்ல, ஆங்காங்கே முக்கியமான நகரங்களில், கீழ் திருப்பதி, ஏன் சென்னையில் கூட மடங்களை நிறுவியதோடு அந்த மடங்களில் ஸ்ரீநிவாஸப் பெருமானின் விக்ரகங்களைப் பிரதிஷ்டை செய்து பூஜாக்ரமங்களும் தொடர்ந்தன. இன்றும் சென்னையில் பைராகி மட கோயில் என்று ஒரு ஸ்ரீநிவாஸர் கோயில் உள்ளது. அதை இந்த மஹந்துக்களே பராமரித்து வருகின்றனர். புரட்டாசி மாதம் திருமலையில் நமது திருவேங்கடநாதனுக்கு நடைபெறுவதுபோல வருடாந்திர பிரம்மோத்ஸவத்தை அதே நாளில் கொடியேற்றத்துடன் தொடங்கி திருவோணத்தில் தீர்த்த வாரி இந்த கோயிலில் நடைபெறுகிறது.

## தலயேறு குண்டு


தாள்ளபாக்க அன்னமாச்சாரியர் சிறந்த பக்திமான். இவர் இந்த “தலயேறு குண்டு”வை தொட்டு பரவசமடைவார். இதற்கு “தலைத்தொடும் குண்டு” எனவும் பெயருண்டு. இது ஆரோக்கிய வாழ்வுக்கான சின்னமாகவும் விளங்குகின்றது. மலைப்பாதை ஏறும் பக்தர்கள் கால்வலி தலைவலி போன்றவை நிவாரணமாவதற்கும் எல்லாம் நிவர்த்தியாகும் என நம்புவதாலும் அந்தந்த அவயவங்களை இந்த குண்டோடு இடித்துக் கொள்வர்.

தொடர்ந்து மலைப்படிகளை ஏறிப்போகும் போது வழிபாட்டு மண்டபம், புதிய கோபுரம் கண்ணுக்குத் தென்படும். இவை மட்ல குமார அனந்தனின் ஆக்கம். வழியில் இருபுறமும் அனுமன் விக்ரகங்களை பக்தர்கள் வழிபடுவர்.



## மோகாலி மெட்டு (முழங்கால் படி)

**அக்கைமார்கள் கோயிலில் இருந்து சற்று முன்னோக்கி நடந்தால் வலது பக்க பார்வைக்குத் தென்படுவது முழங்கால் படி, சுந்தரமான கோபுரம், அந்த கோபுரத்திற்கானப் படிகளில் ஏறும்பொழுது வழியில் பாஷ்யகாரர் என்னும் இராமாநுஜர் சன்னதியை அடையலாம். இங்கிருந்து திருமலை அடைவது எளிதே. முழங்கால் படி பாத மண்டபம், சாரே பேட்டை தேசாந்திர மண்டபம் இவற்றைக் கடந்து திருமலையை அடைவோம். இந்த வழிப் பாதையில் அதாவது முழங்கால் படியிலிருந்து திருமலை வரையிலான படி மார்க்கத்தில் வைணவ பக்தி சிரோமணிகளான ஆழ்வார்களின் விக்ரகங்கள் நம்மில் பக்தி பரவசத்தை ஏற்படுத்தும்.**



இனி நமது திருமலையில் கோயில் நிர்வாகம் இந்த மஹந்துக்கள் பொறுப்பில் வந்த விவரங்களைப் பார்ப் போம். நமக்கு இந்த விவரங்கள் கோயில் கல்வெட்டு களிலிருந்தும், சரித்திர ஆராய்ச்சியாளரான திரு. சாது சுப்ரமண்ய சாஸ்திரி அவர்கள் எழுதிய வரலாற்று நூலிலிருந்தும் தெரிய வருகிறது. 1843ஆம் வருடம் கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் (அதாவது ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது) கோயில் நிர்வாகம் இந்த ஹாதிராம்ஜி மடத்திற்கு அளிக்கப்பட்டது. இவர்களை அந்த காலத்தில் "விசாரணை கர்த்தா", அதாவது நிர்வாகத்தை, வரவு, செலவு கணக்குகளை கவனிப்பவர்கள் என்று அழைத்தனர்.

நிர்வாகம் மட்டும்தான் இவர்கள் பொறுப்பில் இருந்ததே தவிர மற்றபடி கோயில் பூஜை விதிகள், ஆகம விஷயங்களில் இவர்கள் தலையிடக் கூடாது. நிர்வாகத்தை இவர்களுக்கு மாற்றிய போது அதற்கு, முதல் "விசாரணை கர்த்தா" வாக இருந்தவர் ஸ்வாமி ஸேவந்தாஸ்ஜி என்கிற மஹந்து. இவர் சுமார் 30 வருட காலம் இந்த பொறுப்பில் இருந்தார். கி.பி. 1843–ல் இவர் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 26–9–1864–ல் இவர் காலமாகும் வரை இவரே அந்த பொறுப்பில் இருந்தார். இவர் காலத்தில் தான் ஸ்வாமி புஷ்கரிணியில் மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, வெகு காலம் நிறுத்தப்பட்டிருந்த "ஜலகேளி மண்டபோத்ஸவம்" மீண்டும் வழக்கத்திற்கு வந்தது. திருமலை ஆலயத்தின் "படிகாவலி கோபுரம்" (நுழைவுவாயில் கோபுரம்) மட்டுமின்றி ஆலயத்தின் உட்புறமும் மராமத்து பணிகளைச் செய்து கோயிலைப் புதுப்பித்தார்.

இவருக்குப் பின்னர் 1880–ல் மஹந்து ஸ்ரீ பகவான் தாஸ் விசாரணை கர்த்தாவாக பொறுப்பேற்றார். சுமார் பத்து வருட காலம் இவர் பொறுப்பில் நிர்வாகம் இருந்தது. அதன் பின் வந்தவர் ஸ்வாமி மஹாவீர் தாஸ். இவர் நான்கு வருட காலமே பொறுப்பில் இருந்தார். அவருக்குப் பின்னால் வந்தவர் ஸ்வாமி ராம கிருஷ்ண தாஸ். இவர்கள் காலத்தில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும் கோயிலின் அன்றாட பூஜைகள் தவறா மல் நடைபெறும்படி பார்த்துக் கொண்டார்கள்.

1901–ல் மஹந்து ஸ்வாமி பிரயாக்தாஸ் பொறுப்புக்கு வந்ததும் ஸ்வாமி ஆலயத்திற்கு மட்டு மன்றி, வழிபட வரும் பக்தர்களுக்கும் பல சௌகரியங் கள் செய்தார். இன்றும் மஹந்து காலத்தில் இவர் பொறுப்பில் இருந்த காலம் பொற்காலம் என்று சொல்ல லாம். திருமலைக்கு பக்தர்கள் நடந்து வரும் வழியை சீர்படுத்தி அவர்கள் எளிதாக மலை ஏறும்படி செய்தார். ஆங்காங்கே யாத்ரிகர்கள் தங்குவதற்கு சத்திரங்கள் கட்டினார். குடிநீருக்காக குளங்கள் வெட்டினார். திருமலையில் கோயிலின் நான்கு புறங்கள் மட்டுமின்றி, மக்கள் புழங்கும் இடங்களில் சரியான பாதைகள் அமைத்து விளக்குகள் இரவு முழுவதும் எரியும்படி செய்து, திருமலையை ஒரு நகரமாக்கினார். ஆலய கோபுரங்களை சீரமைத்ததோடு, 1908–ல் ஆலயத்தின் ஆனந்த நிலைய விமானத்திற்கு தங்கமுலாம் பூசி

மஹந்த் செய்த விசேஷமான காரியம் என்னவெனில் திருமலை, திருப்பதி, திருச்சானூர் கோயில்களில் இருக்கும் கல்வெட்டுகளை ஆய்வு செய்து, அவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, நமது திருவேங்கடவனின் பெருமையை ஆங்கிலேயே அரசாங்கமும் அறிந்து கொள்ளும்படி செய்தார். இது 'எபிக்ராபிகல் ரிப்போர்ட்' என்று அழைக்கப்பெற்றது. இதற்கு பேருதவியாக இருந்தவர் சரித்திர ஆராய்ச்சியாளரான சாது சுப்ரமண்ய சாஸ்திரி என்கிற மஹா பண்டிதர்.



ஜொலிக்கச் செய்தார். இதற்கு ஆதாரமாக கோயிலில் கல்வெட்டும் உள்ளது. இந்த விஷயங்களில் அவருக்கு பெரிதும் உதவியாக இருந்தவர் ராம் லக்கன்தாஸ் என்கிற அதிகாரி. வேலூர், திருப்பதி, திருமலை ஆகிய இடங்களில் மாணவ, மாணவிகள் படிக்க நடுநிலைப் பள்ளிகள், ஸம்ஸ்க்ருத மொழியை அபிவிருத்தி செய்ய ஓரியண்டல் கல்லூரி ஆகியவை இவர் காலத்தில் தான் அமைந்தன.

மஹந்து பெயரிலேயே இருந்த இந்த பள்ளி களும், கல்லூரிகளும் பின்னர் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் கோயில் நிர்வாகம் வந்ததும் ஸ்ரீவேங்கடேஸ்வரா பள்ளி, ஸ்ரீ வேங்கடேஸ்வரா கல்லூரி என்கிற பெயரோடு தற்போதும் விளங்கு கின்றன. ஹீஜுர் காரியாலயம், பள்ளிகளுக்கும் புதிய கட்டிடங்கள் அமைத்ததும் இவரது காலத்தில் தான்.

சென்னையில் திருப்பதி ஸ்ரீ மஹந்து பிரஸ் என்று ஆரம்பித்து அனேக இந்துமத சம்பந்தப்பட்ட காவியங் கள், அன்னமாசார்யர் கீர்த்தனைகள், திருவேங்கடத்து எம்பெருமானைப் போற்றுகின்ற புராணங்கள் ஆகிய நூல்களைப் புதுப்பிக்கச் செய்தார். திருமலை, திருப்பதி கோயில் சம்பந்தப்பட்ட விஷயங்களை அனைவரும் தெரிந்து கொள்ளும்படியாக ஒரு மாத பத்திரிகையையும் ஆரம்பித்தார். சில வருடங்கள் ஆனபின்னர் அந்த பிரஸ் திருப்பதிக்கு மாற்றப்பட்டது.

இவை அனைத்துக்கும் மேலாக அவர் செய்த விசேஷமான காரியம் என்னவென்றால் திருமலை, திருப்பதி, திருச்சானூர் கோயில்களில் இருக்கும் கல்வெட்டுகளை ஆய்வு செய்து, அவைகளை ஆங்கி லத்தில் மொழிபெயர்த்து, நமது திருவேங்கடவனின் பெருமையை ஆங்கிலேய அரசாங்கமும் அறிந்து கொள்ளும்படி செய்தார். இது "எபிக் க்ராபிகல் ரிப்போர்ட்" என்று அழைக்கப்பெற்றது. இவருடைய இந்த மகத்தான காரியங்களுக்குப் பேருதவியாக இருந்தவர் சரித்திர ஆராய்ச்சியாளரான சாது சுப்ரமண்ய சாஸ்திரி என்கிற மஹா பண்டிதர். அவருடைய சேவையையும் இது சம்பந்தமாக அவர் எழுதியுள்ள நூலையும் யாரா லும் மறக்க இயலாது.

திருவேங்கடவனின் திருக்கோயிலுக்காக முந்தைய அரசர்கள் மானியமாக எழுதி வைத்த கிராமங்கள் மட்டுமல்லாது, கோயில் திருப்பணிகளுக்காக மேலும் இரண்டு கிராமங்களை வாங்கி, அதில் கிடைக்கும் வரு வாயை கோயில் மராமத்து பணிக்கு செலவிட்டார். அந்த கிராமங்களே கார்வேடி நகரமும் திருத்தணியுமாகும். இந்த கிராம நிர்வாகங்களை கவனிக்க இரண்டு பேஷ்கார்கள், அவருக்கு மேலாக ஒரு மூத்த அதிகா ரியை ஏற்பாடு செய்து, ஒழுங்குபடுத்தினார். 1932 வரை சுமார் 33 வருடங்கள் இவருடைய பராமரிப்பில் நமது திருமலையான் கோயில் பெருமையோடு விளங்கியது.

சுமார் 90 வருட கால மஹந்துக்கள் பொறுப்பில் இருந்த ஆலய பொறுப்புகள் 1932-ல் மதராஸ் கவர்னமெண்ட் ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்து அவர் கள் கையில் ஒப்படைக்கப்பட்டது. அப்படி உருவானதே திருமலை திருப்பதி தேவஸ்தானம்.

இவ்வாறாக, வடமாநிலத்தவரால் அன்போடும், பக்தியோடும் அழைக்கப் பெறும்'பாவாஜி என்கிற நமது திருவேங்கடத்து எம்பெருமானின் பரம பக்தரான ஸ்ரீ ஹாதிராம்ஜி மஹந்துவால் ஆரம்பிக்கப்பட்ட மஹந்து மடத்தின் மேற்பார்வையில் சுமார் 90 ஆண்டுகள் நமது திருமலை ஆலயம் இருந்ததற்கான விவரங்களை இந்த சிறிய கட்டுரையின் மூலம் அறிந்து கொண்டோம். கலியுகத் தெய்வமான திருவேங்கடமுடையானின் வருடாந்திர புரட்டாசி மாத பிரம்மோத்ஸவ சமயத்தில் எம்பெருமானின் அபிமானத்துக்குப் பாத்திரமான பக்தர் ஸ்ரீ ஹாதிராம்ஜி பாவாவை நினைவு கூர்வோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம் 2020 செப்டம்பர் 19 முதல் 27 வரை



20-09-2020 ஞாயிற்றுக்கிழமை
இரவு : ஹம்ஸ வாகனம்



21-09-2020 திங்கட்கிழமை
பகல் : சிம்ம வாகனம்





21-09-2020 திங்கட்கிழமை
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

22-09-2020 செவ்வாய்க்கிழமை
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்



designpsivaprasad

திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர
பிரம்மோத்ஸவம்
2020 செப்டம்பர்
19 முதல் 27 வரை



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

22-09-2020 செவ்வாய்க்கிழமை
இரவு : சர்வ பூபால வாகனம்





23-09-2020 புதன் கிழமை
பகல் : மோகினி அவதாரம்



designpsivaprasad

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# திருமலையப்ப ஸ்வாமி
# வருடாந்திர
# பிரம்மோத்ஸவம்
# 2020 செப்டம்பர்
# 19 முதல் 27 வரை

**24-09-2020 வியாழக்கிழமை**
**பகல் : அனுமத் வாகனம்**





**24-09-2020 வியாழக்கிழமை**
**இரவு : யானை வாகனம்**



designpsivaprasad

திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர
பிரம்மோத்ஸவம்
2020 செப்டம்பர்
19 முதல் 27 வரை





25-09-2020 வெள்ளிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்



25-09-2020 வெள்ளிக்கிழமை
இரவு : சந்திரப்பிரபை வாகனம்



designpsivaprasad

## திருமலை பிரம்மோத்ஸவத்தில்...



# திவ்யப்பிரபந்த பாராயணம்

–திருமதி பிரேமா நந்தகுமார்,
ஸ்ரீரங்கம், 04312432959

திருமலையில் எம்பெருமான் கண்டருளும் உத்சவங்களில் பிரம்மோத்சவம் மிகச்சிறப்பானது. பெயருக்குத் தகுந்தாற்போல் பெரிய அளவில் நடக்கும் இந்த உத்சவத்தில் மலையப்ப ஸ்வாமி, கண்கவரும் வாகனங்களில் வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பதைக் கண்டு பேரின்பம் பெறும் பக்தர்கள் கூட்டம் மிகப்பெரிய அளவில் இருக்கும். எத்தனை அலங்காரங்கள், வாகனங்கள், மக்கள் மெய்மறந்து ஆடும் கிராமீய நடனங்கள், செவிகள் கேட்டு மகிழும் வாத்திய ஒலிகள் தன்மயமாக, தன்னை மறந்து பணக்காரனும் பாமரனும் வேற்றுமை காணாது அருகருகே நின்று இறைவன் நம்மிடையே வந்து அருள்பாலிப்பதை சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி, கோவிந்தா, கோவிந்தா என்று அழைக்கும் இனிமையைக் காண, கேட்க விணணவரும் வந்து விடுகிறார்கள் என்று நம்பமுடிகிறது.

வாகனங்களில் மலையப்ப ஸ்வாமி எழுந்தருளும்போது அத்யாபகர்கள் செவ்வையாய் நாலாயிர திவ்ய பிரபந்தத்திலிருந்து ஆழ்வார்கள் அருளிச் செயலை விண்ணப்பித்தவாறு வருவதைக் காணும் போது, பாசுரங்களை அறிந்தவர்கள் கூடவே சொல்லியவாறு மகிழ்வார்கள். இதுவே உபயவேதாந்தம் எனப்படுவது. கம்பீரமான வடமொழி மறைகளும் இனிமை சிந்தும் தமிழ் மறையும் இணைந்து இறைவனை வழிபடும் நேர்த்தி ஆன்ம சுத்தி அளிப்பதாகும்.





வாகனத்தில் எழுந்தருளும் ஸ்வாமி, அருகில் இருந்தவாறு துதிகள் சொல்லி அர்ச்சனை முதலியவற்றை நடத்தும் அர்ச்சகர்கள் உடன் நடந்தவாறு திவ்ய பிரபந்த பாசுரங்களை கூறிவரும் அத்யாபகர்கள் எனும் போது, இந்த ஒன்றுடன் மற்றொன்று பிணைந்த நிலையை ஏற்படுத்தியவர்களை நன்றியுடன் நினைக்கிறோம். இந்த பிணைப்பில் சிலவற்றை இங்குக் காண்போம். இப்பாசுரங்களின் தொடக்கம் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார். பேயாழ்வார் இயற்றிய திருவந்தாதிகளில் காண்கிறோம்.

தமிழகத்தைக் களப்பிரர் ஆட்சி அழித்த நாட்கள் மறைந்து, புதிய மறுமலர்ச்சி ஆறாம் நூற்றாண்டில் தொடங்கியது. அச்சமயம் மூன்று பக்தர்கள் புண்ணிய தலங்களைத் தரிசிக்க வெவ்வேறு இடங்களிலிருந்து கிளம்பி வந்தபோது திருக்கோவலூர் எனும் திவ்ய தேசத்தில் சந்தித்தனர். காரிருள் நேரம். மழை நிற்காமல் பெய்கிறது. மூவரும் ஒரு வீட்டின் முன்புறம் இடைகழியில் (தேஹளீ) ஒதுங்கினர். திடீரென அவர்களை வேறொருவர் அழுத்துவதாகத் தோன்றியது. அது யார்? எப்படி காண்பது? பொய்கையாழ்வார் புற வாழ்வில் உள்ளவற்றை ஒன்று சேர்த்து ஒரு வெண்பா பாடினார்.



*"வையந்தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக செய்ய*
*சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடராழி நீங்குகவே என்று".*

இடர் ஆழி என்னும் நம்மால் காணமுடியாத துயரங்கள் விலகட்டும் என்று, கையில் சக்கரம் வைத்திருப்பவனை வேண்டுகிறேன் என்றார். உடனிருந்த பூதத்தாழ்வார் அதுபோலவே அகத்தினுள்ளவற்றை வைத்து விளக்கேற்றினார்.

*"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி*
*ஞானச்சுடர் விளக்கேற்றினேன், நாரணற்கு*
*ஞானத்தமிழ் புரிந்த நான்".*



புறவாழ்விலும், அகவாழ்விலும் இறைவனையே காணும் பக்தர்கள் உள்ள இடத்திற்கு இறைவனால் வராமல் இருக்க முடியாது. வந்து விட்டான்! இக்காட்சியில் மெய்மறந்து பேயாழ்வார் பாடினார்.

*"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்*
*பொன் ஆழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்*
*என் ஆழி வண்ணன் பால் இன்று".*

திரு என்னும் தேவியை முன்வைப்பதால், இராமாநுஜ சித்தாந்தம் ஸ்ரீவைஷ்ணவம் என்று அழைக்கப்படுகிறது. இம்மூன்று ஆழ்வார்களும் முதலாழ்வார்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் நூறு பாடல்களை அந்தாதியாகப் பாடினார்கள். இந்த அந்தாதிகளில் நாம்

மிகச்சிறப்பான காட்சிகளைக் காண்கிறோம். பிரம்மோத்ஸவத்தின் முதல் நாளன்று, மாலை மயங்கும் நேரத்தில், மலையப்பஸ்வாமி பெரிய சேஷ வாகனத்தில் எழுந்தருள்கிறார். மறுநாள் காலை சிறிய சேஷ வாகனத்தில் வருகிறார். மூன்றாம்நாள் சிம்மவாகனம் என்று தினமும் பிரம்மோத்சவ நாட்களில் எம்பெருமான் வாகனங்களில் வருவதைக் காண கண் கோடி வேண்டும்.



திருமலையப்பனிடம் இம்மூன்று ஆழ்வார்களும் கொண்டிருந்த காதல் அவர்களது பாசுரங்களில் வெளிப்படுகிறது. பூதத்தாழ்வார் பாடுவார்:

*"பதி அமைந்து நாடிப் பருத்து எழுந்த சிந்தை*
*மதி உரிஞ்சி, வான் முகடு நோக்கி கதி மிகுத்து அம்*
*கோல் தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே*
*மால் தேடி ஓடும் மனம்".*

தமிழ் மறை ஏற்றம் கண்ட நாலாயிர திவ்யப் பிரபந்தம் எம்பெருமான் எடுத்த அவதாரங்கள் பற்றியும், பரமபதநாதன் பற்றியும் பேசுகிறது. ஒரு எடுத்துக் காட்டு: பொய்கை ஆழ்வார் எம்பெருமானுக்கு எப்படியெல்லாம் சேவை செய்கிறார் என்பதை ஒரு பாசுரத்தில் பட்டியலிடுகிறார்.



*"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்*
*நின்றால் மரவடியாம் நீள் கடலுள் - என்றும்*
*புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்*
*அணையாம் திருமாற்கு அரவு".*

அப்பப்பா! எத்தனை விதமான சேவைகள்! வசுதேவர் கம்சனின் சிறையிலிருந்து அப்பொழுதுதான் அவதரித்த சின்னஞ்சிறு கண்ணனை ஒரு கூடையில் வைத்து யமுனையைக் கடந்து, கோகுலம் சென்றபோது கனமழை பெய்தது. அப்பொழுது கூடைமேல் படம் விரித்து குடையாகவில்லையோ? கிருஷ்ணன் அமர நினைக்கும்போது அங்கே சிம்மாசனமாக உருவம் எடுக்கிறார். இந்த சீரிய சிங்காசனத்தில் இருந்து கேட்கும் வரங்களைத் தரவேண்டுமென்று ஆண்டாள் திருப்பாவை 23வது பாசுரத்தில் பாடுகிறாளே!



எம்பெருமான் நடக்கும்போது ஆதிசேஷன் அவரது திருவடிக்கு மரவடியாக கைங்கர்யம் செய்கிறார். இது காட்டிலுள்ள இராமபிரானை பரதன் வணங்கி, அவரது பாதுகைகளைப் பெற்றும், பாதுகையே துணையாகும் என்று நந்தி கிராமம் எடுத்துச்சென்று 14 ஆண்டுகள் இராமன் திரும்பி வரும்வரை அந்த சாம்ராஜ்யத்தை நன்கு பரிபாலித்ததை நினைவூட்டுகிறது.

பாற்கடலில் எம்பெருமான் துயிலும்போது சேஷன் தெப்பமாகி விடுகிறார். அவரது படத்திலுள்ள ஆயிரம் மணிகளும் ஒளிவிளக்காக செயல்படுகின்றன. ஆதிசேஷனே திருமால் போர்த்திக்கொள்ளும் மெல்லிய இதமான

பூம்பட்டாகவும் இருக்கிறார். இப்படி சகலவித கைங்கரியங்களும் செய்வதால் போலும், மலையப்ப ஸ்வாமிக்கு இரண்டு சேஷவாகனங்கள் உள்ளன.



வீதியுலா வரும் வாகனங்களில் ஹம்சவாகனமும் ஒன்று. எம்பெருமானே ஹம்சாவதாரமும் செய்து பிரம்மாவிற்கும், சனகர் முதலிய அவரது மானஸபுத்திரர்களுக்கும் யோகம் சாங்கிய யோகம் முதலியவற்றை கற்பித்து விஷ்ணுவே ஆதிமுதல்வன் என்று கூறியதாக பாகவதம் கூறுகிறது (ஸ்கந்தம் 11, சர்க்கம் 13, 15–42 வரிகள்). நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழி (1–8–10) ஹம்சாவதாரமெடுத்து எம்பெருமான் பிரம்மாவிற்கு வேதங்களை உபதேசித்தார் என்பதை முன் வைக்கிறது.

*''துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகை மூட*
*மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட*
*பின் இவ்வுலகினுள் பேரிருள் நீங்க அன்று*
*அன்னமது ஆனானே! அச்சோ! அச்சோ! அருமறை தந்தானே*
*அச்சோ! அச்சோ!''*



மலையப்ப ஸ்வாமி சிம்ம வாகனத்தில் வீதியுலா வரும்போது அத்யாபகர்கள் பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதியை சொல்வார்கள். சிம்மாசனம், சிம்மகதி என்பதெல்லாம் விஷ்ணு கோயில்களில் நாம் கேட்கும் காணும் காட்சிகளே. இந்த அந்தாதியின் 95வது பாசுரத்தில் சிம்ம ரூபியாகத் தோன்றிய நரசிம்மாவதாரத்தைக் காணலாம்.

*''புகுந்து இலங்கும் அந்திப் பொழுதத்து அரியாய்*
*இகழ்ந்த இரணியனதாகம் - சுகிர்ந்து எங்கும்*
*சிந்தப் பிளந்த திருமால் திருவடியே, வந்தித்து என்*
*நெஞ்சமே! வாழ்த்து''.*





யானைவாகனம், குதிரை வாகனம், சூரியப்பிரபை, சந்திரப்பிரபை என்று சிறப்பாக மலையப்ப ஸ்வாமி வீதியுலா வருவார். அத்யாபகர்களும் பொருத்தமான பாசுரங்களைச் சொல்லி சேவிப்பார்கள். ஸ்வாமி தேரில் ஏறி வருகிறார் என்றால், திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை எனும் பிரபந்தத்தை சேவிப்பார்கள். இது மிகச் சிறப்பாக ரதபந்தத்தில் இயற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு எழுத்தும் மிக ஜாக்கிரதையாக 1–9, 9–1 என்ற

எண்களில் மாற்றி மாற்றி வருமாறு கோர்க்கப்பட்டுள்ள கவிதை ஏழு அடுக்குகள் கொண்டது. எம்பெருமானது கருணை தானாகப் பொழிவது என்பதைக் கூறுவ தாகும். இதோ முதல் சில வரிகள்:



*"ஒரு பேர் உந்தி இரு மலர்த் தவிசில்*
*ஒருமுறை அயனை ஈன்றனை ஒரு முறை*
*இருசுடர் மீதினில் இயங்கா மும்மதிள்*
*இலங்கை இருகால் வளைய ஒரு சிலை*
*ஒன்றிய ஈர் எயிற்று அழல் வாய் வாளியின்*
*அட்டனை மூவடி நானிலம் வேண்டி*
*முப்புரி நூலொடு மான் உரி இலங்கு*
*மார்வினின் இரு பிறப்பு ஒரு மாண் ஆகி*
*ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை..."*

இக்கவிதையை தமிழில் எழுதும்போது பொருளாழம், பக்தி நிறைவு கொண்ட ஏழு நிலைகள் மிக அழகிய ரதமாகக் காட்சியளிக்கிறது. அடுக்காக இது கும்ப கோணத்திலுள்ள ஆராவமுதன் பற்றியிருப்பதால் அங்கே சாரங்கபாணி கோயில் உட்பிரகாரத்தில் இந்த ரதபந்தம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.



திருமழிசை ஆழ்வாரின் நான்முகன் திருவந்தாதி கல்ப விருட்ச வாக னம் மற்றும் சர்வ பூபால வாகனங்களுடன் இணைகிறது. இறைவன் கேட்டப் பொருள் கொடுக்கும் கல்ப விருட்சம் தானே, அதில் சந்தேக மென்ன என்பது போல் எம்பெருமான் பெருமை இங்கு பேசப்படுகிறது. 11வது பாசுரத்தில் ஆழ்வாரின் தெய்வீக உணர்ச்சியைக் கேளுங்கள்.

*"வாழ்த்துக வாய் காண்க கண் கேட்க செவி மகுடம்*
*தாழ்த்தி வணங்குமின்கள் தண் மலரால் - சூழ்ந்த*
*துழாய் மன்னு நீள் முடி என் தொல்லை மால் தன்னை*
*வழா வண் கை கூப்பி மதித்து".*



வேங்கட நாதன் அரசர்களுக்கெல்லாம் தலைவனான பேரரசன். அனைத்து அரசர்களுக்கும் தலைவன் என்று கூறும் சர்வ பூபால வாகனம் கம்பீரமாக விளங்குகிறது. கஜவாகனம், குதிரை வாகனம், கருட வாகனம் முதலியவை இந்த வாகனம் காட்டும் பண்பாட்டிற்கு பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்களுடன் இணைந்து முக்கியத்துவம் அளிக்கின்றன. இந்த கட்டுரைக்கு முத்தாய்ப்பாக அனு மந்த வாகனத்தின் சிறப்பைக் காண்போம்.

அ னு ம ந் த வாகனத்துடன்





வரும் அத்யாபகர்களது இசை நம்மை பெரியாழ்வார் திருமொழிக்கு இட்டுச்செல்லும். மாருதி ஏழு கடல்களை தாண்டி வந்து, அசோக வனத்தில் சீதையைக் கண்டு பிடித்து விட்டான். குரங்கு உருவம் ஒன்று தன் நாயகனிடமிருந்து தூதுவனாக வந்திருப்பதை அவளால் எளிதில் நம்ப முடியாதுதானே? இராமன் விரைவில் வருவான், அவளை சிறையிலிருந்து மீட்டுவிடுவான் என்று கேட்பது இனிமையாக இருப்பினும், எப்படி நம்புவது?

## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264359 தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.**



இவனும் ராவணன் போட்டுக் கொண்டுள்ள ஒரு மாயாவி வேஷமோ? அப்பொழுது அனுமன் இராமனுக்கும் சீதைக்கும் முன்பு நடந்த சில சம்பவங்களைப் பட்டியலிடுகிறான். சிவ தனுசை முறித்து சீதையை மணந்தது; பரசுராமன் தோற்றது; தனித்திருந்த போது இராமனின் கைகளை மல்லிகை மாலையால் சீதை கட்டியது; கைகேயி காரணமாக இராமனும் லக்ஷ்மணனும் சீதையுடன் காட்டிற்குச் சென்றது; இராமனுக்கு குகனுடன் ஏற்பட்ட நட்பு; பரதன் காட்டிற்கு வந்து இராமனது காலடியில் வீழ்ந்து தமையனின் பாதுகைகளைப் பெற்று நந்திகிராமத்தில் இருந்தபடி ராஜ்ய கைங்கரியங்களை கவனித்தது; இராமன் காகாசுரனை மன்னித்தது; மாரீசன் பொன்மானாக வந்து சீதையை இராமனிடமிருந்து பிரித்தது; முடிவாக இதோ அண்ணல் இராமனின் மோதிரம்:

*“திக்கு நிறை புகழாளன் தீ வேள்விச் சென்ற நாள்*
*மிக்க பெருஞ் சபை நடுவே வில் இறுத்தான் மோதிரம் கண்டு*
*ஒக்குமால் அடையாளம் அனுமான்! என்று உச்சிமேல்*
*வைத்துக்கொண்டு உகந்தனளால் மலர்க்குழலாள் சீதையுமே”.*



இத்திருமொழியில் வரும் பத்து பாசுரங்களுமே (பெரியாழ்வார் திரு.3-10) ஒரு சங்க்ஷேப இராமாயணமாக ஒலிக்க, நம் கண்களும் சீதையுடன் ஆனந்த கண்ணீர் வடிப்பது ஆச்சரியமில்லை. மலையப்ப ஸ்வாமி அனுமந்த வாகனத்தில் எழுந்தருளும்போது பக்தர்கள் குழாம், வால்மீகி இராமாயணம் முழுவதும் கேட்டதுபோல மகிழ்கிறார்கள். திருமலையப்ப ஸ்வாமி , ஆழ்வார்கள் அருளிச் செயல் மற்றும் வாகனங்கள் மூன்றுமே பிரம்மோத்சவத்தின்போது தோற்றுவிக்கும் தெய்வீக அனுபவத்தை உணர்ந்திட ஒரு பிறவி போதுமா என்ன?

# தமிழ் மறை போற்றும் திருவேங்கடம்

–திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி,
94438 79592

ஈரேழு பதினான்கு உலகங்களையும் படைத்துக் காத்து ஜகத்நிர்வாகம் செய்தருளும் ஒப்பற்றப் பேராற்றலும் கருணையுமே வடிவான பரஞ்ஜோதியை வட மொழியான சமஸ்கிருதத்தில் ஓதப்பட்ட வேதங்கள் ஆழ்வார்களின் அவதாரங்களின் வழியே செந்தமிழில் பாசுரங்களாக ஓதப்பட்டு திராவிட வேதமாகியது. ஆழ்வார்களின் தலைவராகிய ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி மற்றும் பெரிய திருவந்தாதி பிரபந்தங்கள் முறையே ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் அர்த்தங்களையும் உள்ளடக்கியது. இதனையே மதுரகவி ஆழ்வார் *''அருள் கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடினான்''* எனவும், *''மிக்க வேதியர் வேதத்தின் உட் பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்''* எனவும் நம்மாழ்வாரை துதிக்கின்றார். இந்த தமிழ் மறைக்கு அங்கங்களாக திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களும், உபஅங்கங்களாக மற்ற ஆழ்வார்கள் அருளிய பிரபந்தங்களும் போற்றப் படுகின்றன.



கர்ம வினைகளால் கட்டுண்டு பலப்பல பிறப்புக்கள் எடுத்து உழலும் ஜீவாத்மாக்களுக்கு ஆத்ம ஞானத்தினையும், அந்தமில்லா பேரின்ப ஸ்ரீவைகுந்தப் புருஷார்த்தப் பேரின்ப வாழ்வினையும் அருளும் விதமாக ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து எம்பெருமான் பூலோகம் எழுந்தருள் கையில் அவன் திருப்பாதம் முதலில் பட்ட இடம் திருவேங்கடம் என்பது ஆழ்வார்களின் திருவுள்ளம். வேத உபநிஷத் சாரமான வியாசர் அருளிய பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் என்னும் விளக்கவுரை அருளிய ஸ்ரீராமாநுஜர் தமது தியான சுலோகத்தில்

*''ச்ருதிசிரஸி விதீப்தே பிரஹ்மணி ஸ்ரீநிவாசே*
*பவது மமபரஸ்மிந்*
*சேமுஷீ பக்த ரூபா''*

பரப்பிரம்மமான அலர்மேல் மங்கையுறை மார்பனான திருவேங்கடமுடையானிடம் தமக்கு பக்தியுண்டாக வேண்டுமென்ற பிரார்த்தனை செய்கிறார். இதிலிருந்து வேதத்தின் வடிவான எம்பெருமானின் முதல் அர்ச்சா அவதாரம் திருவேங்கடமுடையான் என அறுதியிட முடிகிறதாக ஆசாரியர்கள் திருவுள்ளம். ரிக்வேதம் எம்பெருமானின் புகழை துதிப்பதாகும்.

யஜுர்வேதம் ஆராதனை, யாகம், தானம் இவைகளைப் பற்றி விளக்குவதாகும். இசையோடு சேர்த்து எம்பெருமானின் ஸ்வரூப ரூப விசேஷ திருக்கல்யாண குணங்களைக் கொண்டாடுவது சாம வேதமாகும். அர்த்த சாஸ்த்திரம், அரசியல் யுத்த முறைகள், மந்திர தந்திரங்களை விளக்குவது அதர்வண வேதமாகும். இத்தகைய வேதாந்த முறைகளில் திருவேங்கடமுடையானை ஆழ்வார்கள் அனுபவித்து பாசுரங்களை பொழிந்துள்ளது ஸ்ரீவைஷ்ணவர்களின் பெரும்பேறு.

**முழுவேதத்தமுது:**

*''சோதியாகி எல்லாவுலகும்*
*தொழும்...*
*தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே''*
– திருவாய்மொழி 3–3–5

திருமலையில் சேவை சாதிக்கும் எம்பெருமான் சோதிமயமான திருமேனியனை உடையவனாய் ஒளிவீசுகிறான். விண்ணோரும் மண்ணோரும் என உலகத்தவர் அனைவரும் பக்தியுடன் தொழும் பரம் பொருளாய் திருக்காட்சித் தந்தருள்கிறான். பேரண்டம் முழுவதையும் படைத்துக் காத்து நிர்வகிக்கும் மூலாதார சக்தியாய் திகழ்கிறான். வேதமாகிற கடலைக் கடைந்தால் கிடைக்கும் அமுதமான திருவேங்கடமுடையான் தமது அனைத்து திருக்கல்யாண குணங்களுடன் வேதியர்களால் துதித்துப் பாடப்படுகிறான்.



**மறைப்பொருள்:**

*"இறையாய் நிலனாகி எண்திசையும் தானாய்....*
*உள்ளத்தின் உள்ளே உளன்"* – மூன்றாம் திருவந்தாதி 39

சந்திர மண்டலத்தைத் தொடுமளவிற்கு உயரமுள்ள திருவேங்கட மலையில் அருவிகளில் பாயும் வெள்ளம் ஆனந்த முழக்கமிடுகிறது. நிலமாகப் பரந்தும், வானமாக எட்டுதிசைகளிலும் விரிந்தும் உள்ள எம்பெருமான் வேதமாகவும் வேதத்தின் பொருளாகவும் இருப்பதோடு அல்லாமல் ஆழ்வாரின் உள்ளத்திலே அந்தர்யாமியாய் சேவை சாதித்தருள்வதை அறுதியிடுகிறார் பேயாழ்வார்.

**வேதநல்வாக்கு:**

*"அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணியஅன்று ஆழி தொட்டானை*
*மின்திகழ்குடுமி வேங்கடமலைமேல் மேவிய வேதநல்விளக்கை"* –
பெரிய திருமொழி 4–3–8



# திருமலையின் க்ஷேத்திர பாலகர்

திருமலை க்ஷேத்திரத்தின் பாலகர் ருத்ரர் அதாவது சிவன். பூர்வம் இச்சிலையானது இரவு நேரங்களில் திருக்கோயிலை சுற்றி வந்து, திருக்கோயிலை பாதுகாக்கும் பணியை செய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் ஏகாந்த சேவை நிறைவடைந்த பிறகு அர்ச்சகர் கோயிலின் சாவிக் கொத்தினை இந்த சிலை மீது வைத்து, வணங்கி தனது இல்லம் திரும்புவர். மறுநாள் அந்த சிலையை வணங்கி திருக்கோயில் நடை திறப்பர். ஒருநாள் இரவு நேரத்தில் அக்கற்சிலை சுழன்று வர, அந்த நேரத்தில் பாலகன் ஒருவன் அவ்வழியே வர, அதன் கீழ் விழுந்து மாண்டான். திருமலையில் பக்தர்களின் கூட்டம் அதிகமாகும் இந்த வேளையில் இது போன்ற நிகழ்வுகளை தடுக்க இச்சிலையானது கோகர்ப்ப தீர்த்தமான அதாவது பாண்டவ தீர்த்தமருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவ்வாறு பிரதிஷ்டை செய்தபோது அச்சிலையின் ஒரு சிறு பகுதியானது திருக்கோயிலின் துவஜஸ்தம்ப பீடத்தின் ஈசான்ய மூலையில் அமைந்திருக்கிறது என்பது பெரியோர்கள் வார்த்தை.

இந்த க்ஷேத்திர பாலகர் சிலை கோகர்ப்ப தீர்த்தத்தில் பூர்ண வடிவிலும், திருக்கோயிலுள் அம்ச வடிவிலும் அமைந்துள்ளது. சிவராத்திரி அன்று கோகர்ப்ப தீர்த்தம் அருகில் இருக்கும் க்ஷேத்திர பாலகருக்கு தி.தி.தே. உயர் அதிகாரிகள், அர்ச்சகக்குழுவினர் மேளதாளத்துடன் சென்று சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நிர்வகித்து, அருட்சுவையான பிரசாதங்களை சமர்ப்பித்து க்ஷேத்திர பாலகரை வணங்குவது சிறப்பான ஒன்றாகும்.







ஒளிவீசும் சிகரத்தினையுடைய திருவேங்கட மலை உச்சியில் வேதத்தின் விளக்கின் ஒளியாய் பிரகாசிக்கும் மலையப்பன் பாணாசுரனின் ஆயிரம் தோள்களும் அறுபட்டு விழும்வண்ணம் திருவாழியினை பிரயோகம் செய்து அடியார்களை ரட்சித்தவன்.

**வேங்கட வேதியன்:**

*"வலம்புரி ஆழியானை வரையார் திரள் தோளன்தன்னை*
*புலம்புரி நூலவனைப் பொழில்*
*வேங்கடவேதியனை"* – பெரிய திருமொழி 9–9–9

குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த வேங்கட மலையிலே சேவை சாதிக்கும் எம்பெருமான் அடியார்களை காத்தருளும் பொருட்டு மலையினையொத்த திரண்ட தோள்களையும், திருக்கைகளிலே சங்குசக்கரங்களையும் தரித்துள்ளான். எம்பெருமானின் திருமார்பில் பொருந்தியிருக்கும் அழகான யங்ஞோபவீதம் தவழ்கின்ற அர்ச்சாவதாரப் பேரழகை அனுபவிக்கிறார் திருமங்கையாழ்வார்.

**நால்வேதப் பண்ணகத்தான்:**

*"உணர்வாரார் உன்பெருமை? ஊழிதோறூழி?...*
*பண்ணகத்தாய்! நீகிடந்த பால்"*

– முதல் திருவந்தாதி – 68

நான்கு வேதங்களாலும் இசையுடனே ஓதப்படும் பரம்பொருளின் உண்மையான ஸ்வரூபத்தை காலம் காலமாக உணரத்தலைப்பட்டு உணர்ந்த மெய்ஞானியர் எவரும் இல்லை. நித்ய விபூதியாய் பரமபதத்தில் நித்ய சூரிகளுக்கு தரிசனமும், லீலாவிபூதியாய் பூலோகத்தில் அவதாரங்களும், திருப்பாற்கடலிலே பள்ளிக்கொண்ட கோலத்தில் தேவர்களுக்கு அருள்பாலித்தலும், திருவேங்கடமலையிலே அர்ச்சாவதாரமாய் அடியார்களுக்கு அநவரதகாலமும் வேண்டியதை வேண்டியபடி அருளுதலுமான எம்பெருமானின் பல்வேறுபட்ட நிலைகளை உணரத்தலைப்பட்ட பொய்கையாழ்வார் அவற்றினை உணரமுடியாது அதிசயிக்கிறார்.

**வேதத்தான் வேங்கடத்தான் :**


*"மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு...*
*பாதத்தான் பாதம் பணிந்து".* – 3ம் திருவந்தாதி 14

நான்கு வேதங்களாலும் போற்றப்படும் எம்பெருமான் திருமலையிலே சேவை சாதிக்கின்றான். தேவர்க

## பஞ்சபாண்டவ தீர்த்தம் (கோகர்ப்ப தீர்த்தம்)



**திருமலை க்ஷேத்திரபாலகர் சிலையருகில் பஞ்சபாண்டவ தீர்த்தம் அமைந்துள்ளது. இது கோகர்ப்ப தீர்த்தத்தின் ஒரு பாகமே. இங்கு பாண்டவ குகையும் உள்ளது. இந்த குகையில் குந்தி தேவி, திரௌபதி தாயார் மற்றும் பஞ்சபாண்டவர்களுக்கு ஶ்ரீகிருஷ்ணர் உபதேசம் அளிக்கும் விதமாக ஒரு சிலை அமைந்துள்ளது. அதன் அருகில் திருவேங்கடமுடையான் சிலையும், அவரது திருப்பாதங்களும் மற்றும் அனுமன் சிலையும் அமைந்துள்ளது. துவாபர யுகத்தில் பாண்டவர்கள் கௌரவர்களை அழித்த பாபங்களிலிருந்து விடுபட, ஶ்ரீகிருஷ்ணர் இந்த க்ஷேத்திரத்திற்கு அனுப்பினார். பாண்டவர்கள் வைகாச சுத்த துவாதசி ஞாயிற்றுக்கிழமை சேஷாத்ரிக்கு வந்தனர். இந்த நீரோடைக்கு அருகில் ஆசிரமம் அமைத்த காரணத்தால் இந்த குகை பாண்டவ குகை என்றும், இத்தீர்த்தம் பஞ்சபாண்டவ தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.**




**இத்தீர்த்தத்தின் அருகில் ஶ்ரீராமாயண சித்திரங்கள் நிறைந்த சிலைகள் காணக்கிடைக்கின்றன.**



## அனுமான் குண்ட் மற்றும் அனுமன் ஆலயம்

க்ஷேத்திர பாலகர் சிலையினை தரிசிக்க செல்லும் அடர்ந்த காட்டு வழி பாதையில் மரங்களுக்கு இடையில், கோடையிலும் வற்றாத "அனுமான் குண்ட்" என்கிற அழகிய குளமும் அதன் அருகில் அனுமன் கோயில் ஒன்றும் காணப்படுகிறது. இயற்கை எழில் நிறைந்த இந்த குளத்தையும் அஞ்சனை புத்திரனான அனுமனையும் கண்டு தரிக்க வேண்டிய தலமாகும்



ளின் திருமுடிகள் வருடப்பெரும் திருமலையப்பனின் திருவடிகளை சரணம் புகுவதால் சிற்றின்ப ஆசைகள் ஒழிந்து எம்பெருமானை உணரவைப்பதான வேதம் முதலான சாஸ்திரங்களிலே மனம் ஈடுபடும் என்கிறார் பேயாழ்வார்.

**திருமந்திரம்:**

*"பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி*
*நின்று பின்னரும்*
*...தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம்*
*அடை நெஞ்சமே!"* –பெரியதிருமொழி 1–8–9

"ஓம் நமோ நாராயணாய" எனும் எட்டெழுத்து மந்திரத்தினை ஆசாரியன் வழியே உபதேசிக்கப்பெற்று உச்சாடனம் செய்து அதன் ரகஸ்யார்த்தங்களை உணர்ந்தவர்களின் மறுபிறப்பினை ஒழித்து ஸ்ரீவைகுந்த புருஷார்த்தம் அளிக்கவல்ல கருணையே வடிவான எம்பெருமான் உலகம் அனைத்திற்கும் திலகம் போன்ற நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருவேங்கட மலையிலே சேவை தந்தருள்கிறான்.

**துவயம்:**

*"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்*
*மங்கையுறை மார்பா...*
*புகலொன்றில்லா அடியேனுன் அடிக்கீழ் அமர்ந்து*
*புகுந்தேனே"* – திருவாய்மொழி 6–10–10

ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தில் துவயம் எனப்படும் மந்திரத்தின் அர்த்தத்தின்படி அடியார்கள் பிராட்டியினை முன்னிட்டுக் கொண்டே எம்பெருமான் திருவடிகளில் சரணம் புகவேண்டும். இத்தகைய எளிய வழிமுறையினை ஸ்வாமி நம்மாழ்வார் ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு காட்டித்தருகையில் அவர் முதன்முதலில் சரணம் புகுவது அலர்மேல் மங்கையுறை மார்பனான திருவேங்கடமுடையானின் திருவடிகளில்.

**வினைதீர் மருந்து:**

*"கொடியா வடுபுள்ளுடையானே! கோலக்*
*கனிவாய்ப் பெருமானே!...*
*நொடியார் பொழுதும் உன பாதம் காண நோலாது*
*ஆற்றேனே"*
– திருவாய்மொழி 6–10–7

கொடிய பகைவர்களை பொசுக்கவல்ல கருடனைக் கொடியாக உடையவனும், அழகிய கனிகள் போன்ற அதரங்களை உடையவனுமான, திருவேங்கடமுடையான் செடிகளாய் தழைத்திருக்கும் பாவங்களைத் தீர்க்கும் மருந்தாக உள்ளான். அவனது திருவடிகளை காணுகின்ற பேற்றுக்கு ஒரு நோன்பும் நோற்கவில்லை என்றாலும் அத்திருவடிகளை உடனே அடைந்து ஒரு நொடியும் பிரியாமல் தரித்திருக்க பிரார்த்தனை செய்கிறார் நம்மாழ்வார்.

*"வேதப்பொருளே வேங்கடவா வித்தகனே"* என பெரியாழ்வாரால் கொண்டாடப்படும் திருவேங்கடமுடையானின் சந்நிதியில் பகவத் இராமாநுஜர் வேதார்த்த சங்க்ரஹம் எனும் உபன்யாசம் அருளி வேதாந்த ஸ்வரூபமாக திருவேங்கடமுடையான் ஆழ்வார்களால் நாலாயிர திவ்ய பிரபந்தம் எனும் திராவிட வேத அருளிச்செயல் தமிழ் மறையால் போற்றப்பட்டதை நிர்வாகம் செய்தருளியுள்ளார்.

# சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு...



முனைவர் எம்.எஸ். வேங்கடாசாரி,
காட்டுமன்னார்கோயில்,
94446 49304

திருமகள் நாயகன் விரும்பி யுறையும் திருப்பதிகள் பலவுள. திருமலைகளும் பலவுள; ஆயினும் திருப்பதி, திருமலை ஆகிய சொற்கள் முறையே திருமலையின் அடிவாரத்திலுள்ள திருப்பதி நகரையும், திருவேங்கடவன் உறையும் திருமலையை யும் பெரும்பாலும் குறிப்பனவாகின்றன. இத்திரு மலையில் உள்ள திருவேங்கடவனை, நம்மாழ்வார் ***''புகலொன்றில்லா அடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே''*** என்று கூறி அலர்மேல் மங்கையை முன் னிட்டு சரணடைந்தார். திருமலையடிவாரத்தில் நம்மாழ்வார் திருக்கோயிலும் தீர்த்தமும் இன்றும் நாம் ஸேவிக்க உரியவைகளாகத் திகழ்கின்றன. மேற்கூறிய திருவாய்மொழி பாசுரப்பகுதி துவய மந்திரத்தின் முதல் வாக்கியப் பொருளாக அமைகின்றது. துவய மந்திரத் தின் இரண்டாம் வாக்கியப் பொருள் கூறும்பகுதி ***''ஒழிவில் கால மெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்...''*** என்பதாகும். இப் பாசுரப்பகுதி திருவாய் மொழி மூன்றாம் பத்தில் மூன் றாம் திருவாய் மொழி முதற்பாடலில் உள்ளது. இத் திருவாய்மொழியின் ஏழாம் பாசுரத்தின் முதலடியே இக் கட்டுரையின் தலைப்பாக இடம் பெற்றுள்ளது. அப் பாடல் வருமாறு :

*''சுமந்து மாமலர் நீர்சுடர் தூபங் கொண்டு*
*அமர்ந்து வானவர் வானவர் கோனொடும்*
*நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்கு*
*சமன்கொள் வீடுதருந் தடங்குன்றமே.''*

திருவாய்மொழி –3.3.7

இதன் கருத்து: வானவர், தம் தலைவரோடு சிறந்த பூக்களையும், நீரையும், திருவிளக்கையும், தூபத்தைத் தூப பாத்திரத்திலும் சுமந்துகொண்டு வந்து வணங்கி எழுகின்ற திருவேங்கட மலை வீடுபேற்றினைத் தரும் என்று திருமலையின் பெருமை பேசப் பெற்றது. இவ்விடத்தில் “வீடு” என்ற சொல் மோட்சத்தின் பயனான கைங்கர் யத்தைக் குறிக்கும்.

வைணவம் போற்றும் கண்ணன் அருளிய பக வத் கீதையின் ஒன்பதாம் அத்தியாயம் ராஜவித்யா ராஜ குஹ்ய யோகம் என்று அழைக்கப்படுகிறது. அந்த அத்தியாயத்தின் இரண்டாம் சுலோகத்தில் கண்ணன் “இந்த விஞ்ஞானத்துடன் கூடிய ஞானம் அனைத்து வித் யைகளுக்கும் அரசு: மறைத்துப் போற்றப்பட வேண்டிய வற்றில் சிறந்தது; மிகவும் புனிதமானது; மிகச்சிறந்தது; கண்கூடாக உணர்தற்குரியது; தரும நெறிக்குட்பட்டது; கடைபிடிப்பதற்கு மிகவும் எளிதானது; மேலும் அழிவற் றது” என்றருளிச்சென்றுள்ளார். இந்த அத்தியாயத்தின் இருபத்தாறாம் சுலோகத்தில் “எவன் பக்தியோடு எனக்கு இலை, மலர், பழம், நீர் முதலியவற்றை அர்ப் பணம் செய்கிறானோ மற்றும் தூய பக்தியின் பயனை எதிர்பாராது பிரேமை நிறைந்தவனாய் விளங்கு கின்றானோ, அந்த அடியவன் பணிந்தளிப்பவைகளை விருப்பத்தோடு உண்பேன் (பயன் கொள்வேன்)” என்று பகவான் அருளிச் செய்துள்ளார். அச்சுலோகம் வருமாறு :

*''பத்ரம் புஷ்பம் பலம் தோயம்*
*யோ மே பக்த்யா ப்ரயச்சதி*
*ததஹம் பக்த்யுஹ்ருதம்*
*அச்நாமி ப்ரயதாத்மந:''*

இந்த சுலோகத்தின் பொருளை மனதில் கொண்ட வானவர் (தேவர்கள் மற்றும் நித்யர்கள்) வானவர்கோன் (பிரம்மா மற்றும் சேனாதிபதி) ஆகியோர் சுமந்து மா

மலர் நீர்சுடர் தூபங் கொண்டு திருமலைக்கு வந்து திருவேங்கடவனை பணிகிறார்கள். இவர்கள் திருமலைக்கு வந்தவுடன் அந்த மலையின் மகிமையால் வேறு பயன் கருதாதவர்களாக ஆகிறார்கள். (ஆழ்வார் அடுத்த பாசுரத்தில் **“திருவேங்கட மாமலை ஒன் றுமே தொழ நம்வினை ஓயுமே”** என்றருளியுள்ளார்). அதனால் வீடு பேற்றுக்கு இணையான கைங்கர்யம் பண்ணும் பேற்றை அடைகின்றனர். இனி கட்டுரைத் தலைப்பில் உள்ள சொற்கள் குறித்துக் காணப்பெறும்.

சுமந்து மாமலர்: சுமந்து என்னும் சொல் இவ்விடத்தில் தலையில் சுமந்து என்று கொள்ளப்பெறும்: இறைவனுக்குப் பணிந்தளிக்கப்பெறும் பொருட்களைத் தலையில் சுமந்து வருதலே முறைமையாகும். இந்த மரபு இன்றும் திருமலையில் போற்றப்படுகிறது. நாள்தோறும் காலையிலும் மாலையிலும் பெருமாளுக்குத் தோ(ள்)மாலை சேவை நடைபெறுகிறது. தேவர்கள் மாமலர்களைச் சுமந்து வந்து பணிந்தளிக்கும் முறையில், இராமாநுசர் பணித்த மடத்தலைவர்களான பெரிய ஜீயரும், சின்னஜீயரும் மற்றும் ஏகாங்கிகளும் தம் திருமுடிமேல் மாமலர் இடம் பெறும் கூடைகளைச் சிரசுமேல் தாங்கி மேளம் தாளம் மற்றும் சகல மரியாதைகளுடனும் பலிபீடத்தை வலம் வந்து பெருமாளுக்கு சமர்பிக்கிறார்கள். திருவேங்கடமுடையானுக்குப் பணிபுரியும் பாக்கியம் பெற்ற அந்நிலத் தேவர்கள் மேலாத் தேவர்களை நினைவூட்டுகின்றனர். இராமாநுசர், நம்மாழ்வார் திருப் பாசுரத்தில் ஆழ்ந்து தாமே அக் கைங்கர்யம் நிகழவும் ஏற்பாடு செய்தார்.

தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 49க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | ன | ம | ய் | யா | | 2 பி | | ஜ | 3 வி | |
| ன் | 4 ஏ | | ம் | 5 ச | ந் | தி | ர | | 6 க | ரு | ட |
| ன | கா | | 7 சி | 8 தி | த | த | ம் | ல | ச | ஷா | 9 சே |
| தா | ந் | வி | 10 கோ | ரு | ந் | பா | மோ | பா | ம் | த் | ஷ |
| ன | த | | | ம | ம | ர | ற் | பூ | 11 ஹ | தி | |
| ம் | | 13 தோ | மா | லை | னு | ப் | ச | வ | | ரி | ம் |
| டு | ட் | 14 ல | | | 15 அ | 16 சு | வ | ர் | 17 தே | பி | ல |
| ட் | | 18 ஸ | 19 வை | கு | ண் | ட | ம் | 20 ச | | லி | ச |
| மெ | 21 மோ | ப் | | ரி | தி | த் | னா | ஜ | ஞ் | 22 அ | டா |
| ரி | கி | த | ந் | ன | 23 ஆ | ம் | ல | ச | டா | ரு | 24 க |
| வா | னி | கி | 25 வ | கு | ள | | 26 கொ | லு | வு | | ங் |
| 27 ஸ்ரீ | | ரி | 12 அ | ய | ன | | ம் | ல | ச | தா | 28 வே |











## திவ்விய விருக்ஷங்கள்

“அனுமான் குண்டு” விலிருந்து க்ஷேத்திர பாலகர் சிலையை தரிசிக்கச் செல்லும் வழியில் அழகிய வனப்பகுதியில் பிரம்மா, விஷ்ணு, பரமேஸ்வர வடிவில் மூன்று மரங்கள் சிறிய இடைவெளியில் அமைந்திருப்பது பார்ப்பதற்கு மிகவும் ஆச்சர்யமானதாக தோன்றும். இங்கு நாகமல்லி மரம், மரி செட்டு, பேடி செட்டு என முப்பெரும் தேவர்களின் வடிவில் மூன்று விருக்ஷங்கள் இருப்பதைக் காணலாம். இங்கு பேடி மரத்தின் அருகில் தத்தாத்ரிய தீர்த்தம் உள்ளது

# வேங்கட வெற்பே வேத வெற்பு

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி,
94434 39963

கலியுகத்தில் வாழ்பவர்களுக்கு அர்ச்சாவதாரத்தை விட்டால் உய்வதற்கு புகல் வேறு இருக்க முடியாது. இந்த அர்ச்சாவதாரமே நம்மை இறைவனிடம் கொண்டு போய்ச் சேர்த்து, பேரின்பப் பெருவாழ்வை அளிக்கும். இதை ஆழ்வார்கள் நமக்குப் பல பாசுரங்களில் காட்டிக் கொடுத்தனர்.

*''செய்ய பரத்துவமாய் சீரார் வ்யூகமுமாய் துய்ய விபவமாய்த் தோன்றியிவற்றுள் எய்துமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றான் பன்னு தமிழ்மாறன் பயின்று''* – என்று இந்த அர்ச்சாவதாரத்தின் பெருமையை நம்மாழ்வார் நமக்கு காட்டிக் கொடுத்தார் என்று பேசுகிறார் மணவாள மாமுனிகள்.

இந்தத் திருத்தலங்கள் எண்ணற்றது. இருந்தாலும் கூட, ஆழ்வார்களின் அமுதத்தமிழால் பாடப் பெற்றிருந்தால்தான் அத்தகு திருத்தலங்களை திவ்ய தேசங்கள் என்று அழைக்கிறோம். பாடப் பெறுவது என்றால் ஒரு பதிகம் கூட வேண்டியதில்லை; ஒரு பாசுரம் கூட வேண்டியதில்லை; ஒரு பாசுரத்தின் ஒரே ஒரு சொல் இருந்தால் கூட, அத்தலம் திவ்ய தேசம் என்று அழைக்கப்படுகிறது.

உதாரணமாக தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான திருநீரகம் என்கிற திருத்தலம் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. இத் திருத்தலம்



108 திவ்யதேசங்களில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மட்டும் ஒரே ஒரு சொல்லால் நீரகத்தாய் என்று அழைக்கப்பட்டது. இந்த ஒரு சொல்லாலேயே இத்தலம் திவ்யதேசம் ஆயிற்று. திருத்தலங்களின் ஏற்றத்தைத் தெரிந்து கொள்வதற்கு – ஆழ்வார்களின் ஏற்றத்தையும் – அவர்கள் பாடிய தமிழின் ஏற்றத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வகையில் – ஆழ்வார்களால் பாடப்பட்ட திருத்தலங்கள் 108. அதில் பரமபதம், பாற்கடல் இரண்டும் நிலவுலகுக்கு அப்பால் இருப்பன.

நிலத்தில் இருக்கக்கூடிய திருத்தலங்கள் 106 –ல் மூன்று தலங்கள் சிறப்பு வாய்ந்தன. "கோயில், திருமலை, பெருமாள் கோயில்" என்று அழைக்கப்படும் இவற்றுள் நடுவில் இருக்கக்கூடிய திருமலையே திருவேங்கடம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வேங்கடமே வேத வெற்பு என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. வேதம் என்பது எம்பெருமானைப் போலவே ஆதியும் அந்தமும் அற்றது. மனிதனால் செய்யப்படாத பெருமை உடையது (அபௌருஷேயம்). காரணம், மனிதனால் செய்யப்படும் நூல்களில் பல குற்றங்கள் இருக்கும். அவரவர் அறிவாற்றல், ஞானம், சந்தேகங்கள், மாறுபாடுகள் போன்றவை அந்த நூல்களில் ஊடுருவியிருக்கும். எது உண்மை என்பதை விட தான் நம்புகின்ற உண்மையைக் கொண்டதாக இருப்பதால் அதனை நாம் பிரமாணமாக ஏற்றுக் கொள்வதில் பல தடைகள் உண்டு. எனவே தான் ஒரு மனிதனால் செய்யப்படாததான வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டார்கள். அந்த வேதம் ஒரு ஜீவாத்மாவுக்கு இப்படி உபதேசிக்கிறது. "ஏ! ஜீவனே நீ இம்மை மறுமைக்குரிய பல்வேறு புருஷார்த்தங்களைப் பெற விரும்பினால் திருமலைக்கு செல்" என்று வேதம் வழிகாட்டுகிறது. (*அராயி காணே விகடே கிரிம் கச்ச* – ரிக் வேதம் எட்டாம் அஷ்டகம் எட்டாம் அத்யாயம் பதின்மூன்றாவது ஸர்க்கம் முதல் மந்திரம்.) வேதம் வழிகாட்டும் வெற்பு தான் வேங்கடம்.














# திருமலையில் வேண்டுதல்கள்

திருவேங்கடமுடையானின் பக்தர்களின் ஆசாரங்கள் வேறுவேறாயினும், அவர்களது மொழி மாறுபாடாயினும், வேண்டுதல்களை வியக்கும் வண்ணம் செலுத்தினாலும், அவற்றை அனைத்தையும் விருப்பத்தோடு ஏற்று, பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுபவர். விஜய நகர சக்ரவர்த்தி ஸ்ரீகிருஷ்ண தேவராயர் 1513–ல் இருந்து 1521 வரை ஏழு முறை திருமலைக்கு யாத்திரை செய்து, எம்பெருமானுக்கு நவரத்ன ஹாரம், தங்கத்தாலான பால் கிண்ணம், மரகத தோரணம், விமானத்திற்கு தங்க முலாம் பூசுதல் போன்ற பல வேண்டுதல்களை சமர்ப்பித்தார். அச்சுதராயர், வெங்கடபதிராயர் போன்றவர்களும் பல வேண்டுதல்களை சமர்ப்பித்தனர். இம்மாமன்னர்களுக்கு முன்னதாகவே கி.பி. 614ஆம் ஆண்டில் பல்லவ ராணி சாமவை வெள்ளியால் உருவேற்றப்பட்ட ஸ்ரீநிவாசர் சிறு விக்ரஹத்தை வேண்டுதலாக சமர்ப்பித்தார். இதுமட்டுமின்றி துலாபாரம், ஆலய பிரதக்ஷணம், அங்க பிரதக்ஷணம், அகண்ட தீபாராதனை... என எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கும் வேண்டுதல்கள் எண்ணிலடங்காதவை. எவராலும் அறிய முடியாதவை.

2. இம்மலை வேங்கடாத்ரி, சேஷாத்ரி, நாராயணாத்ரி, கருடாத்ரி, விருஷபாத்ரி, அஞ்சனாத்ரி, வ்ருஷாத்ரி என ஏழு மலைகளால் ஆனது. சப்த என்பதற்கு ஏழு என்பது பொருள். கிரி என்றால் மலை. எனவே சப்தகிரி என்றும் ஸப்த பர்வங்கள் என்றும் இந்த மலை குறிக்கப்படுகிறது. ஸப்த என்பதற்கு வேதம் என்றும் பொருள். எனவே இந்த ஏழு மலையை வேத வெற்பு எனக் கொள்ளலாம்.

3. *''வேதம் அனந்த:''* என்று சொல்லும்படியாக அளவினாலும் பெருமையாலும் எண்ணற்றது. திருமலையின் மலைத் தொகுதிகளும் பெருமைகளும் எண்ணற்றது. ரிஷிகள் வாக்குக்கும் எட்டாதது. பரத்வாஜ ரிஷி இந்திரனிடம் பல முறை தமது ஆயுளை விருத்தியடையச் செய்ய வரம் கேட்கிறார். அப்படி நீட்டிக்கப்பட்ட ஆயுட்காலத்தில் அவர் வேதத்தைக் கற்கிறார். பலநூறு வருடங்கள் படித்தும் – அவரால் வேதத்தை முழுமையாகக் கற்க முடியவில்லை. அப்பொழுது பரத்வாஜர் இந்திரனிடம், "நான் இதுவரை படித்த வேதத்தின் அளவு என்ன? இனி படிக்க வேண்டியது எவ்வளவு?" என்று கேட்கும்போது, இந்திரன் ஒரு பெரிய மலையைக் காட்டி, "அதுதான் நீ படிக்க வேண்டிய வேதத்தின் அளவு" என்று சொல்லி விட்டு, அதில் இருந்து ஒரு கைப்பிடி மண்ணை எடுத்துக் காட்டி, "இத்தனை ஆயுளில் நீ படித்த வேதத்தின் அளவு இவ்வளவுதான்'' என்று சொல்லுகின்றார். எனவே வேதத்தின் அளவை அளவிட முடியாதது போலவே திருமலையின் சிறப்பையும் அளவிட முடியாது.

4. வேதங்கள் எல்லாம் மலை உருவில் பெருமானை வழிபடுவதால் வேதாத்ரி எனவும் வேதகிரி எனவும் வழங்கப்படுகிறது.

5. 108 திவ்யதேசங்களில் இத்தலத்து எம்பெருமானிடம் தான் சுவாமி நம்மாழ்வார் *''புகல் ஒன்றுமில்லாத அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''* என்று சரணம் புகுகிறார். ஜீவாத்மா சரணம் அடைந்தால் அவனை கரை சேர்ப்பது திருமலை ஆகும் என்பதை இதன் மூலம் நிரூபித்தவர் நம்மாழ்வார்.

6. வேதத்தை திருமகளைப் போலவே புருஷகாரமாகக் கொள்ள வேண்டும். திருமகள் பரிந்துரை செய்து ஒரு ஜீவாத்மாவை கரை சேர்ப்பது போலவே, வேதம், தன்னை நம்பிய ஜீவாத்மாவைக் கரை சேர்த்துவிடும். அதைப்போலவே, வேதமாகிய இந்த மலையும், தன்னை அணுகுகின்ற ஜீவாத்மாவை, பரிந்துரை செய்து எம்பெருமானிடம் சேர்த்துவிடும். அதனால்தான், நம்மாழ்வார் *''வேங்கடமா மலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே''* என்றார். இந்த பேருபகாரத்தைச் செய்வதால் தான் மலை என்று சொல்லாமல் மாமலை என்று அழைத்தார். மா என்பதற்கு பிராட்டி (திரு) என்றும் பொருள், மாமலை என்பதற்கு திருமலை என்றும் பொருள்.

"நீ எம்பெருமானைத் தொழுவது கூட பிறகு தான். இம்மலையைத் தொழுதால் உன்னுடைய வினைகள் ஓய்ந்து விடும். நீ புண்ணிய ஆத்மாவாக மாறி விடுவாய். உன் ஆன்மா தூய்மை பெற்று விடும்." (வேம் – என்றாலே வெந்து போகும் இடம் என்று பொருள். கடம் = வினைகள்.)

7. இம்மலை வாசத்தை நித்ய சூரிகளும் முனிவர்களும் தவத்தின் மிக்கோரும் விரும்புகின்றனர். *''நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்''* என்பது நம்மாழ்வார் வாக்கு.

குலசேகர ஆழ்வார் இத்திருமலையில் வாழும் ஒரு பிறவி தரும்படி மன்றாடுகிறார். திருமலையில் ஒரு படிக்கல்லாகக் கிடந்து (படியாய்க் கிடந்து) பவளவாய் காண்பேனே என்று கதறுகிறார். இதனால் தான் திருவேங்கடமுடையானின் முன் இருக்கும் பொற்படிக்கு குலசேகரப்படி என்றே பெரியோர் பெயரிட்டுள்ளனர்.

8. இம்மலையின் வேத சாம்ய பெருமையைக் கருதியே, இராமாநுஜர், தனது இளம் வயதில், இம் மலையைச் சேவிக்க வந்த போது, மலையடிவாரத்தி லேயே நின்று கொண்டு, மலையின் மேல் மிதித்து நடந்துவர விருப்பமில்லை என்று தெரிவித்ததாகவும், இவருக்காகவே, இவரது தாய் மாமனான திருமலை நம்பிகள், மலைமேலிருந்து தினமும் இறங்கி வந்து இராமாயணம் கற்பித்ததாகவும் வரலாறு.

9. மலையின் உச்சிக்கு சிகரம் (சிரஸ்) என்று பெயர், வேதமாகிய மலையின் உச்சியை உபநிஷத் (வேதசிரஸ்) என்று சொல்லுவார்கள். திருமலையின் சிகரத்தில் உறைபவன் பரமன். பிரம்மம். வேதத்தின் உச்சியாகிய உபநிஷத்தில் உறைபவனும் பரமன். வேதத்தை உபநிஷத் தில் ஏறினால் (புரிந்து கொண்டால்) எம்பெருமானாகிய பிரம்மத்தை உணர்ந்து கொள்ளலாம். ஏழுமலை கடந்து அதன் சிகரத்தில் ஏறினால் எம்பெருமானை அடைந்து விடலாம். வேதத்தின் உச்சியில் பிரம்மம் உறைவது போல மலைச்சிகர உச்சியில் பிரம்மமாகிய மலையப்பன் உறைவதை சங்க (சிலப்பதிகாரம்) இலக்கியமும் கொண்டாடுகிறது.

10. வேதம் விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் பொதுவாக இருக்கிறது. (சாம வேதத்தை வானுலுகத்தில் உள்ள நித்யசூரிகள் தினம் சேவிக்கின்றார்கள். மண்ணுலகில் சாமவேதமாகிய திருவாய்மொழியை நாம் சேவிக்கிறோம். எனவே வேதம் விண்ணுக்கும் மண் ணுக்கும் பொதுவாக இருக்கிறது.) அதைப்போலவே திருவேங்கடமலை விண்ணோர்கள் வந்து வழிபடு வதற்கும் மண்ணவர்கள் சென்று வழிபடுவதற்கும் பொதுவானதாக இருக்கிறது.

11. இந்த பத்து செய்திகளையும் ஒரே பாசுரத்தில் அருள்கிறார் நம்மாழ்வார்.

"குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர் திருவேங்கட மா மலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"

12. கலியுகத்தில் திருவேங்கடமுடையான் ஒரு வனைப் பற்றினாலே போதுமானது என்று நமக்கு ஆழ்வார் அறுதியிட்டுக் கூறவில்லை. "திருவேங்கட முடையானை பற்றி நிற்கும் மலையைப் பற்றுங்கள். அது நம் தீவினைகள் அனைத்தையும் அழித்து நம்மை தடுத் தாட்கொள்ளும்" என்கிறார்.


ஆயர்கள் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழா எடுத்து, அவனுக்குப் பலவகையான உணவுகளைப் படைப்பது வழக்கம். ஒரு சமயம் கண்ணபிரான் இந்திர னுக்கு விழா எடுக்க வேண்டாம் மலைக்கு விழா எடுங்கள் என்றான். கடுஞ்சீற்றம் கொண்ட இந்திரன், புயல் காற்றை யும், பெருமழையையும் உண்டாக்கி ஆயர்களைத் துன் புறுத்தினான். அப்போது பகவான் தம் சுண்டு விரலால் ஏழு நாட்கள் "குன்றம் ஏந்தினான். குளிர்மழை காத்தான்". அப்படிப்பட்ட பரமன் விரும்பிய மலை திருவேங்கட மாமலை. வேதத்தைப் பற்றுவது போலவே வேத வெற் பாகிய திருமலையைப் பற்றினான் என்பது உள்ளுறைப் பொருள். மலையாகிய வேதத்தை அவன் பற்றியது போலவே வேதமாகிய மலையை நாம் பற்ற வேண்டும். பிரம்மோற்சவ காலத்தில் வேத வெற்பைக் கிட்டி நின்று வேங்கடவனை வணங்க வேண்டும் என்பது பொருள்.

அவன் வந்து சேர்ந்த திருவேங்கட மாமலைக்கு நாம் சென்று சேர வேண்டாமா... வேதத்தை எல்லோ ராலும் கற்க இயலாது. வேங்கட வெற்பை எளிதாக அடையலாமே.



## ஸ்ரீலக்ஷ்மி வராக ஸ்வாமி

திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு இருப்பிடம் அளித்தவர் என்பதால் ஸ்ரீலக்ஷ்மி வராக ஸ்வாமிக்கு அன்று முதல் இன்று வரை முதல் பூஜை, நைவேத்தியம் நடைபெறுகிறது. ஸ்ரீலக்ஷ்மி வராக ஸ்வாமியை தரிசித்துப் பின்னரே திருவேங்கடமுடையானை தரிசிக்க வேண்டும் என்பது வழக்கில் இருந்தும் வருகிறது.



# பெரியாழ்வார் அனுபவித்த திருவேங்கட கிருஷ்ணன்



திரு. எஸ். சுதர்சனம்,
நங்கைநல்லூர்,
9962788065

*''நாராயணம் மஹாஜ்ஞேயம் விய்வாத்மாநம் பராயணம்*
*நாராயண பரம்பரஹ்ம தத்வம் நாராயண பர:।*
*நாராயண பரோ ஜ்யோதிர் ஆத்மா நாராயண புர:''*

என்று வேதவாக்கியங்களை ஓதி, ஸ்ரீமந்நாராயணனை முழு முதற்கடவுள், பரம்பொருள், பரதத்வம் என்று நிரூபித்தார் விஷ்ணுசித்தர். அரசன் உட்பட எல்லோரும் வியந்து நிற்க, மன்னனால் தோரணத்தில் கட்டப்பட்டிருந்த பெருஞ்செல்வம் நிறைந்த பொற்கிழி விஷ்ணு சித்தரின் திருக்கைகளில் தானாகவே வந்து விழுந்ததாம். ஸ்ரீமந்நாராயணனை பரத்வம் என்றுணர்ந்த ஸ்ரீவல்லப தேவ பாண்டியன் விஷ்ணு சித்தரை கௌரவிக்க ஆசைப்பட்டான். பட்டர் பிரான் என்னும் பட்டத்தை முதலில் அறிவித்தான். பின்னர் யானைமேல் அமரச் செய்தான். யானை பெருமிதத்துடன் நகரை வலம்வரத் தொடங்கியது.

பக்தனுக்குக் கிடைத்த பெருமையைப்பார்த்து ஆனந்தப்பட்ட பகவான் ஸ்ரீமந்நாராயணன் மஹா லக்ஷ்மியோடு கூடி கருடன் மேல் அமர்ந்து வானில் தோன்றினார். திவ்யதம்பதிகளின் திவ்யமங்கள ரூபம் ஆயிற்றே! காண்பதற்கரிய காட்சியாயிற்றே! கண்குளிரக் கண்டு களித்தார் பட்டர்பிரான். திவ்யதம்பதிகளின் வடிவழகையும் கல்யாண குணங்களையும், பறவையேறி வந்த பரம புருஷனையும் கண்டு பரவசப்பட்டு, திவ்ய தம்பதிக்கு கண் எச்சில் திருஷ்டி, தீங்கு ஏற்படாமலிருக்க திருப்பல்லாண்டு பாடினார். ஒரு பரிவுள்ள தாயுள்ளம் தோன்றுகிறது. தன் பாட்டுக்கு ஒரு தாளம் வேண்டுமே! பட்டத்து யானைகளின் கழுத்திலுள்ள மணிகளையே தாளமாகக் கொண்டு கருட வாகனத்தில் அமர்ந்திருந்த திவ்ய தம்பதிகளை காப்பாற்ற திருப்பல்லாண்டு பாடினார்.

*''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
*பலகோடி நூறாயிரம்*
*மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்*
*சேவடி செவ்வி திருக்காப்பு''*

ஓம் என்னும் ப்ரணவம் அனைத்து வேத மந்திரங்களுக்கும் சாரமாகவும் ஆரம்பமாகவும் அமைவது போல திருப்பல்லாண்டு பதிகம் முதலாவதாகவும், மங்களகரமான துவக்கமாகவும் அமைந்துள்ளது. பல்லாண்டு பதிகத்திற்கும் பட்டர்பிரானுக்கும் முதல் மரியாதை! முதலில் விஷ்ணு சித்தர், பிறகு பட்டர் பிரான். பகவானுக்கு பல்லாண்டு பாடிய இவர் ஆழ்வார்களுக்குள் பெரியாழ்வார் என்றழைக்கப்பட்டார். பகவானே இப்புகழைத் தந்ததாகவும் ஞானிகள் கூறுவர்.

பெரியாழ்வாரின் பாசுரங்கள் அனைத்திலும் ஸ்ரீகிருஷ்ணனே நாயகன் என்றால் அது மிகையாகாது. துவாபர யுகத்தில் அவதரித்து தர்மத்தை நிலை நாட்டிய ஸ்ரீகிருஷ்ணனே கலியுகத்தில் திருவேங்கடவன் என்ற திருநாமம் கொண்டு திருவேங்கடமலையின் உச்சியில் எழுந்தருளியிருக்கிறான் என்பதை பல இடங்களில் நிரூபிக்கிறார் பெரியாழ்வார். திருக்கோட்டியூர் திவ்ய



**ஜ்வரஹர தீர்த்தம் :** இத்தீர்த்தம் தெளிந்த நீரோட்டமாக அமைந் திருப்பது காண்பதற்கு அழகானது. இந்த தீர்த்தத்தால் எல்லாவகை யான காய்ச்சல்கள் அதாவது விஷ ஜுரங்கள் விலகும் என்பது நம் பிக்கை. இத்தகைய மகிமைகளை நாம் பெற வேண்டுமானால் ஆன் மீக பக்தியுடனும் நம்பிக்கையுடனும் எம்பெருமானை நினைத்து நீராடினால் அனைத்து பலன்களையும் பெற இயலும். இதற்கு கீழே அமைந்துள்ள தீர்த்தம் பெயர் “விஷ ஹர தீர்த்தம்”. மஹா சர்ப்பத் தின் விஷத்தை கூட இந்த தீர்த்தம் நீக்கியதால் இதனை விஷ ஹர தீர்த்தம் என அழைப்பர்.

**காயரசாயண தீர்த்தம் :** இந்த தீர்த்தம் வன மூலிகைகள் நிறைந்த பகுதியிலிருந்து வருவதால் இது காயரசாயண தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இந்த தீர்த்தத்தில் பக்தியுடன் நீராடினால் சிறிது நாட்களில் அனைத்து வியாதிகளிலிருந்து விடுப்பட்டு, இளமையாக, வலிமையாக காயகல்ப சித்தியடைவர் என்பது நம்பிக்கை.

தேசத்திலிருந்து புறப்பட்டு, திருமாலிருஞ்சோலை வழியே பல திவ்ய தேசங்களைப் பாடியிருந்தாலும் பிரபந்தத்தை நிறைவு செய்யும்போது திருவேங்கடவன் புகழ்பாடி நிறைவு செய்யும் அழகே அழகு. ஸ்ரீகிருஷ் ணனே வேங்கடநாதன் என்னும் அர்ச்சா அவதார மூர்த்தி யாய், கலியுக வரதனாய், நித்ய வாசம் செய்கிறான் என்று பாடுகிறார். (பெரியாழ்வார் திருமொழி 5. 4. 1)

*“சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்!*
*உலகு*
*தன்னை வாழநின்ற நம்பீ! தாமோதரா!*
*சதிரா! என்னையும்*
*என்னுடைமையையும் உன்*
*சக்கரப் பொறியொற்றிக்*
*கொண்டு*
*நின்னருளே புரிந்திருந்*
*தேன் இனி என் திருக்*
*குறிப்பே?’*



என பிள்ளைத் தமிழ் நாயகனான பெரியாழ்வார், தானே தாய்மை அடைந்து, தான் ஈன்றெடுத்த குழந்தை ஸ்ரீகிருஷ்ணனைத் தாலாட்டி பாலுட்டி சீராட்டி வளர்க்கிறார்.

தன் அனுபவங்களை பாசுரங்களாக அமைக்கிறார். அந்த ஸ்ரீகிருஷ்ணனே, பரம புருஷனே, உத்தம புரு ஷனே, புருஷோத்தமனே, பவித்திரனே பரமபதத்தை யும் திருப்பாற்கடலையும் விட்டு பறவையேறி திரு வேங்கடம் என்னும் உயர்ந்த சிகரத்தின் உச்சியில், குளிர்ந்த மலைப்பிரதேசத்தில் நீர் அருவிகள் கூடிய இயற்கையான கண்ணுக்கினிய சூழ்நிலையில் திரு வேங்கடத்தில் அர்ச்சா அவதார மூர்த்தியாக எழுந் தருளியுள்ளார் என்று உலகிற்கு உணர்த்துகிறார்.

உலகம் வாழ்வதற்காக இங்கு வந்து நின்ற திருக்கோலம் என்கிறார். “வேம்” என் றால் பாபங்கள், “கடம்” என்றால் அழிந்து போவது, எரிந்து சாம்ப லாவது. பாபங்கள் அழியு மிடம் வேங்கடம் என்கிறார். கலியுக வரதனே வேங்கட வன் என்று நிலைநாட்டு கிறார். பிறவி என்னும் நோய் அழிய உயர்ந்த பிரார்த்தனை தலம் என் கிறார். பெரியாழ்வார் அனுபவித்த வேங்கட கிருஷ்ணனை இங்கே தான் முதலில் வணங்குகிறோம்.



# சக்கர தீர்த்தம்



சிலா தோரணம் அருகில் அமைந்துள்ள இந்த சக்கர தீர்த்தத்தில் வேறெங்கும் காணக் கிடைக்காத வடிவில் பெரிய பாறையில் சுதர்ஸன ஆழ்வார் தரிசனமளிக்கிறார். இந்த சுதர்ஸன ஆழ்வார் அருகிலேயே லக்ஷ்மி நரசிம்மரும், சக்கரத்தாழ்வார் (எதிரில்) அபிமுகமாக ஆஞ்சநேய ஸ்வாமியும் காட்சி அளிக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் கைசிக துவாதசி அன்று ஸ்ரீசுதர்சன சக்கரத்தாழ்வாருக்கு சிறப்பான முறையில் பூஜைகள் மற்றும் நைவேத்தியமும் நடைபெறுவது வழக்கம்.

தாய்மைப் பெற்று கண்ணனை தொட்டிலில் இட்டு தாலாட்டும்போதும் வேங்கடவனை அனுபவிக்கிறார். ஸ்ரீகிருஷ்ணன் புழுதியில் அலைகிறான். தவழ்கிறான். அப்பொழுது நிலாவை அழைக்கிறார். கிருஷ்ணனின் மழலை இன்பத்தில் மூழ்கிப் போகிறார். ஸ்ரீகிருஷ்ணனே வேங்கடவன் என்று நமக்கு நினைவூட்டத் தவறுவ தில்லை.

*''சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்*
*எத்தனை செய்யினும் என் மகன் முகம் நேரொவ்வாய்*
*வித்தகன் வேங்கடவாணன் உன்னை விளிக்கின்ற*
*கைத்தலம் நோவாமே அம்புலீ! கடிதோடிவா!''*

நிலவே நீ ஒளி படைத்தவன். பேரொளியும் நீயே, ஆனாலும், என் மகன் ஸ்ரீகிருஷ்ணனின் திரு முகமண்டலத்திலிருந்து நான் காணும் குளிர்ந்த ஒளிக்கு நிகராவாயோ? அம்புலி! ஒன்றை உணர்வாய். ஸ்ரீகிருஷ்ணன் மாயன், மா மாயன். அவனே வேங்கட கிருஷ்ணன். அவன் உன் னைக் காட்டிக் காட்டி அழைக் கின்றான். அவன் கை நோவாது பார்த்துக்கொள். விரைவாக ஓடிவா. கிருஷ் ணனை நினைக்கும்போது வேங்கடவனையும் மனதில் நிறுத்தும் பண்பு பெரியாழ்வார் பண்பு என்றே சொல்லி மகிழ வேண்டும்.



பெரியாழ்வார் தாய் வடிவில் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்கிறார். குழந்தை கிருஷ்ணனும் பெரியாழ்வாரை தழுவிக் கொள்ள ஓடோடி வருகிறான். அந்த இன்பப் பெருக்கில் அச்சோ! அச்சோ! என்று வாய் உளரப் பாடுகின்றார். தமிழும் தவழ்ந்தோடி வந்து ஆழ்வாரைத் தழுவிக்கொள்ள, ஆழ்வார் காணும் சந்தோஷத்தை அளவிடமுடியுமோ? கண்ணனைத்தான் மையமாக வைத் துப் பாடுகிறார். உண்மை.... ஆனாலும் முழு முதற் கடவுள் என்று நிரூபிக்க வந்த பிரகாசமான, கம்பீரமான கிரீடமுடைய திருவேங்கடவனை ஸ்ரீகிருஷ்ணனாகவே கண்டு அனுபவிக்கத் தவறியதில்லை.

*''மின்னு முடியனே! அச்சோ அச்சோ*
*வேங்கடவாணனே! அச்சோ அச்சோ'*

மாடுகள் மேய்த்துவரக் கண் ணனுக்கு கோல் கொண்டு வா என காக்கையை அழைக்கும் பாசுரத்திலும் ஆழ்வார் ஸ்ரீவேங்கடநாதனை மறக்க வேயில்லை.

*''மின்னலங்காரற்கு*
*ஓர்கோல் கொண்டுவா!*
*வேங்கடவாணற்கு*
*ஓர்கோல் கொண்டுவா!''*

கிருஷ்ணனே வேங்கட நாதன் ஆதலால் திருவேங்கடவனுக்கும் ஓர் கோல் கொண்டுவா என அழைக்கிறார். கிருஷ்ண வேங்கட ஐக்கியம். இருவரும் ஒன்றே என்ற உணர்வு ஏற்படுத்துகிறார்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு பூச்சூடல். அங்கேயும் வேங்கடவனே ஸ்ரீ கிருஷ்ணன் என்று பாடுகிறார். (பெரியாழ்வார் திருமொழி 2. 7, 3)



*''நீள் திருவேங்கடத்து எந்தாய்! பச்சைத்தமன*
*கத்தோடு பாதிரிப் பூச்சூட்ட வாராய்''*

என்று பாடுகிறார். திருவேங்கட மலையிலுள்ள ஸ்வாமியே! பச்சை நிறத்தையுடைய மரிக்கொழுந்துடன் பாதிரிப்பூவும் சூட்டிக் கொள்ளவாராய் என்று வேங்கட கிருஷ்ணனை அழைக்கிறார்.

கண்ணன் செய்யும் சிறு வயது குறும்புகளை பட்டியலிட்டுக் காட்டும் பெரியாழ்வார்! *''வேதப்பொருளே! என் வேங்கடவா! வித்தகனே! இங்கே போதராயோ!''* என்றழைப்பது ஆராயத்தக்கது. திருமலையில் வாழும் வேங்கட கிருஷ்ணனை அனுபவித்தார் என்பது உறுதியாகிறது. என் வேங்கடவா –என்னுடைய திரு வேங்கடத்தானே என்று உரிமைக் கொண்டாடுவது ஆழ்வாருக்கும் வேங்கடகிருஷ்ணனுக்கும் உள்ள நீக்க முடியாத உறவை சுட்டிக்காண்பிக்கிறது. வேங்கட கிருஷ்ணனே உனக்கு நிகர் நீயே. நீயே கலியுகவரதன் என்று வேங்கடகிருஷ்ணனின் புகழ் பாடுவது போலத் தோன்றுகிறது. ஜகத்காரணன் ஜகத்ரக்ஷகன், பரம புருஷன், வேங்கட கிருஷ்ணன் என்று நிலைநாட்டுகிறார் பெரியாழ்வார்.

கண்ணன் பசு மேய்க்கக் காடு செல்கிறான். அவன் திரும்பி வரும் வரை யசோதை காத்திருக்கிறாள். கம்சனால் ஏவப்பட்ட ராக்ஷஸர்கள் கண்ணனுக்குத் துன்பம் செய்யக்கூடாதே என்ற வருத்தம். யசோதை ஏங்கி கவலைப்பட்டு நிற்பதைப்பார்த்தால் ஸ்ரீகிருஷ்ணன் திருவேங்கடம் வரை சென்று பசுக்களை மேய்த்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

*''கடியார் பொழிலனி வேங்கடவா''* என்று அழைக்கிறார் பரிமளம் நிறைந்த சோலைகள், நீர் அருவிகள், நிறைந்த வளம், இயற்கை அழகு, எல்லா திவ்ய தேசங்களிலும் நித்ய வாசம் செய்பவன் வேங்கடகிருஷ்ணனே என்று நினைக்கத் தோன்றும்.

பெரியாழ்வார் அனுபவித்த வேங்கட கிருஷ்ணனை வணங்கி உய்வோம் வாருங்கள்.

கோவர்த்தன மலையை கொற்றக்குடையாக, தன் செந்தாமரை சுண்டுவிரலால், ஏழுநாட்கள் தாங்கிப்பிடித்து குன்றமேந்திக் குளிர்மழைக் காத்தவனே என்றுரைக்கிறார். மலைக்குக் கீழே நின்ற கோகுலமே காப்பாற்றப்பட்டது. கோவர்த்தனமலைக்கு ஒரு வருத்தமாம். குழந்தை ஸ்ரீகிருஷ்ணன் நம்மைத் தூக்கிப்பிடிக்கும்படி ஆயிற்றே! பாப செயலல்லவா! இதற்கு பிராயசித்தம் என்ன? என்று எண்ணியதாம். கிருஷ்ணாவதாரம் முடிந்து கலியுகம் ஆரம்பமானபோது கோவர்த்தனமலை ஏழுமலைகளாக உருவெடுத்தன. ஏழாவது மலையின் உச்சியில் பகவான் நித்ய வாசம் செய்ய கோவர்த்தனமலை பகவானை தாங்கி இன்றும் நிற்கின்றது. சேஷாத்ரி, கருடாத்ரி, விருஷாத்ரி, விருஷபாத்ரி, அஞ்சனாத்ரி, நாராயணாத்ரி, வேங்கடாத்ரி என்று ஏழுமலைகள். பகவானுக்கு ஏழுமலையான் என்று திருநாமம். கண்ணனே ஏழுமலையான் என்பதால் எம்பெருமானை பக்தர்கள் விரும்பி அழைக்கும் திருநாமம் கோவிந்தன்.





## குன்றம் ஏந்திய கோவிந்தன்




தென்திருப்பதி என்று பக்தகோடிகளால் போற்றப்படும் தான்தோன்றிமலை ஒரு தலைசிறந்த புனித தலமாகவும், பிரார்த்தனைத் தலமாகவும் திகழ்கிறது. கரூரில் இருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் கரூருக்கு தெற்கே 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இத்தலத்தில் திருப்பதி வேங்கடாஜலபதியே கல்யாண வேங்கடரமண ஸ்வாமி எனும் திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார்.

**குன்றின் மேல் கோயில் :**

இந்த விஷ்ணுதலம் குன்றின் மேல் அமைந்துள்ளது. இக்குன்று மேல்புறம் உயர்ந்தும், கீழ்புறம் தாழ்ந்தும் காணப்படுகிறது. கருவறையின் மேல் கட்டப்பட்டுள்ள கோபுரம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. குன்றின் மேல்புறம் குடையப்பட்டுள்ள அழகிய குடைவரையில் கல்யாணவேங்கடரமண பெருமாள், மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். பிரம்மாண்ட வடிவம் கொண்ட இந்தப் பெருமாள், லட்சுமியை தனது மார்பில் தாங்கியிருக்கிறார். இதனால் இங்கு தாயாருக்கு தனி சன்னிதி கிடையாது. ஒரு சமயத்தில் திருப்பாற்கடலில் திருமால், லட்சுமி தேவியுடன் மகிழ்ச்சியாக பேசிக்கொண்டு இருந்தார். அப்போது வாசலின் வெளியே ஆதிசேஷன் காவல் இருந்தார்.

அப்போது வாயுபகவான் இறைவனை சேவிக்க உள்ளே நுழைய முயன்றார். ஆதிசேஷனோ, வாயு பகவானை தடுத்து நிறுத்தினார். அதனால் இருவருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அந்த தருணத்தில் வெளியே வந்த பகவான் இருவரிடையே சமரசம் செய்து வைத்தார். இருவருக்கும் ஒரு போட்டியையும் வைத்தார்.

**தான்தோன்றி மலை :**

இம்மலையில் வேங்கடவன் எவ்வாறு வந்தமர்ந்தார் என்பதை கீழே பார்ப்போம். கரூரை தலைநகராகக் கொண்டு மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் டங்கணாச்சாரி என்பவர் வசித்து வந்தார். இவர் சிறந்த சிற்பியாகவும், சைவப் பற்றாளராகவும் திகழ்ந்தார். அவருக்கு சுந்தராம்பிகை எனும் மனைவி இருந்தாள். இந்த தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் இல்லாத குறை வாட்டியது. ஒரு நாள் டங்கணாச்சாரி, அரசவைக்குச் சென்று இருந்தார். சுந்தராம்பிகை தனது வீட்டில் தனியாக இருந்தாள். அப்போது தெருவில் கோவிந்தா.. கோவிந்தா.. எனும் சப்தம் கேட்டது.

அவள் ஓடோடி வந்து தெருவை பார்த்தாள். அப்போது ஒரு கூட்டம் கோவிந்தா.. கோவிந்தா.. என்று உரக்கக் கத்திக்கொண்டே சென்றது. அந்த கூட்டத்தின் நடுவில் மஞ்சள் ஆடை அணிந்து மார்பில் துளசி மாலையுடன் நெற்றியில் திருநாமத்துடன் ஐந்து வயது சிறுவன் ஒருவன் காணப்பட்டான்.

கூட்டத்தில் ஒரு பெண்மணியிடம் இதுக்குறித்து சுந்தராம்பிகை விசாரித்தாள், அதற்கு அந்த பெண்மணி, அந்த சிறுவன் எனது மகன்தான். எனக்கு புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்தது. திருப்பதி வேங்கடேசனை நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டோம். குழந்தை பிறந்தது. ஐந்தாவது வயதில் குழந்தை

யையும் அழைத்துக் கொண்டு பெருமாளின் சன்னிதியில் வந்து காணிக்கை செலுத்துவதாக வேண்டியிருந்தோம். அதை நிறைவேற்றவே இப்போது திருப்பதி செல்கிறோம் என்றாள். இதனை கேட்ட சுந்தராம்பிகை தானும் திருப்பதி வேங்கடாஜலபதியை வேண்டி அதே பிரார்த்தனை செய்து கொண்டாள். வேங்கடாஜலபதியும் அருள்புரிந்தார்.

சுந்தராம்பிகைக்கு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு குண்டலாச்சாரி என்று பெயரிட்டாள். குழந்தைக்கு ஐந்து வயதானது. பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டிய காலம். சுந்தராம்பிகை இது வரை கணவரிடம் இதுபற்றி கூற வில்லை. தற்போது தைரியத்தை வர வழைத்துக் கொண்டு கூறினாள். கோபத்தில் கொந்தளித்தார் டங்கணாச்சாரி. சிவபெருமானை தவிர உலகில் வேறு தெய்வம் இல்லை. நான் திருப்பதிக்கு போக மாட்டேன். உன்னையும் போக விட மாட்டேன் என்று எச்சரித்து விட்டு, வெளியில் சென்று விட்டார். சுந்தராம்பிகையோ மனம் வருந்தி கண்ணீர் வடித்தாள்.

குண்டலாச்சாரி தனது தாய் அழுவதைக் கண்டு, ஏனம்மா அழுகிறாய்?என்று கேட்க தனது இக்கட்டான நிலையை தனது மகனிடம் சுந்தராம்பிகை கூறினாள். இதனைக் கேட்ட குண்டலாச்சாரி, அம்மா நீ அழாதே! திருப்பதி சீனிவாச பெருமாளை, நமது ஊரிலுள்ள மலைக்குன்றுக்கு வரவழைக்கிறேன். நாம் பிரார்த்தனையை இங்கயே நிறைவேற்றலாம் என்றான்.

மகனின் விளையாட்டுப் பேச்சைக் கேட்ட தாய்க்கு அழுவதா?

## தான்தோன்றி மலை

**அதாவது ஆதிசேஷன் திருவேங்கடமலையை தனது உடலால் அழுத்தி பிடித்துக் கொள்ள வேண்டும். வாயு தேவன் அதை தனது பலத்தால் அசைத்து பிடுங்க வேண்டும். இதுதான் போட்டி. இந்த போட்டி ஆரம்பமாயிற்று. ஆதிசேஷன், மலையை தனது உடலால் சுற்றி இறுக அழுத்திக் கொண்டார்.**

**வாயு பகவான் அதனை பெயர்த்தெடுக்க முயன்றார். ஆனால் வெற்றி கிட்டவில்லை. கோபம் கொண்ட வாயு பகவான், தனது முழு பலத்தையும் கொண்டு பெரும் புயலாக வீசியபோது மலை சிதறுண்டு நாலா பக்கமும் விழுந்தன. அவ்வாறு சிதறி விழுந்த குன்றுகளில் ஒன்று தான் இந்த தான்தோன்றிமலை என்று கூறப்படுகிறது.**

சிரிப்பதா? என்று தெரியவில்லை. அன்று இரவு எல்லோரும் தூங்கியவுடன் குண்டலாச்சாரி, தனது தந்தை வைத்திருந்த சிற்பம் செதுக்குவதற்கான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு மலைக்குச் சென்றான். மலையின் மீது ஆலயம் எழுப்ப அடி அளந்து கொண்டு இருந்தான். அப்போது சந்நியாசி ஒருவர், அவன் முன் தோன்றி, குழந்தாய்! இங்கு வந்து என்ன செய்கிறாய்? என்று கேட்டார். குண்டலாச்சாரி, நான் இங்கே கோயில் அமைத்து, திருப்பதி சீனிவாச பெருமானை அழைக்க போகிறேன் என்று கூறினான்.

இதனைக் கேட்ட சந்நியாசி, உன்னால் இக்காரியம் முடியக்கூடியதல்ல, என்னிடம் ஆட்கள் அதிகம் இருக்கின்றனர். அவர்களை வைத்து கோயில் அமைத்து விடலாம். நீ நாளைக்கு இங்கே வா! என்று கூறினார். குண்டலாச்சாரி வீட்டிற்கு திரும்பி சென்று உறங்கினான். எப்பொழுதும் போல் டங்கணாச்சாரி அதிகாலையில் எழுந்து மலைப்பக்கம் சென்றார். அங்கு ஒரு கோயில் இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

கோயில் கட்டியவர்கள் எப்படியும் வருவார்கள் என்பதால் மலையில் பதுங்கி இருந்தார். அப்போது குண்டலாச்சாரி ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கோயில் வாசலில் நுழைந்தார். இருட்டில் யார் என்று அறியாமல் டங்கணாச்சாரி, சிறுவன் குண்டலாச்சாரியை வாளால் வெட்டி வீழ்த்தினான். அதன் பிறகு யாரும் வராததால் வீட்டிற்கு வந்து உறங்கினான். மறுநாள் காலையில் மலையின் மீது தலை துண்டித்து கிடந்த குண்டலாச்சாரியை, அந்த பகுதி மக்கள் பார்த்து தூக்கி வந்தனர். பெற்றோர் கதறி அழுதனர். அப்போது அங்கு ஒரு சந்நியாசி தோன்றினார். அவர் டங்கணாச்சாரியைப் பார்த்து, கொஞ்சம் துளசி இலையைப் பறித்துக் கொண்டு வா! உன் மகனை பிழைக்க வைக்கிறேன் என்று கூறினார். அரைமனதுடன் துளசியை பறித்துக்கொண்டு வந்து கொடுத்தார் டங்கணாச்சாரி.

அதை வாங்கிய சந்நியாசி, குண்டலாச்சாரியின் தலையையும் உடலையும் சேர்த்து வைத்து கழுத்து பகுதியில் துளசி சாற்றை பிழிந்து



ஊற்றினார். உடனே குண்டலாச்சாரி உயிர் பெற்று எழுந்தான். அதனை கண்டோர் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். பெருமாளின் பெருமையைப் போற்றி புகழ்ந்தனர்.

சுந்தராம்பிகை தனது மகனுக்கு உயிர் கொடுத்த சந்நியாசியின் பாதங்களில் விழுந்து வணங்கினாள். கோயில் கட்டப்பட்ட நிகழ்ச்சியையும், தான் வெட்டப்பட்ட நிகழ்ச்சியையும் குண்டலாச்சாரி தனது பெற்றோர் முன்னிலையில் எடுத்துக்கூறினான்.

அதனை கேட்டு அனைவரும் மகிழ்ந்து மலையை நோக்கிச் சென்றனர். சிறுவனுடன் அவனது பெற்றோர், மன்னன் உள்பட பலரும் சந்நியாசியுடன் மலையேறிச் சென்றனர். ஆனால் மலை மீது சென்றவுடன் உடன் வந்த சந்நியாசி மறைந்து விட்டார். குகையின் நடுவே பகவான் திருப்பதி வேங்கடேச பெருமாள் காட்சியளிப்பதைக் கண்டு அனைவரும் வணங்கினர். அப்போது அசரீரி "குண்டலாச்சாரி என்மீது கொண்டு இருந்த அளவற்ற பக்தியை கண்டு நான் இங்கே பிரசன்னமாகி இருக்கிறேன். இனி நீங்கள் உங்களது பிரார்த்தனைகளை இங்கேயே செலுத்துங்கள். நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறியது பெருமாள் இல்லாமல் வேறு யாராக இருக்கும்.

கருணை வள்ளலாக கரூர் தான்தோன்றிமலை மீது அமர்ந்து பக்தர்களுக்கு அருள் புரிந்து வரும் கல்யாண வேங்கட ரமண ஸ்வாமியை வணங்கி வாருங்கள். உங்கள் இல்லத்தில் இன்பம் தேடி வரும்! ஓம் நமோ நாராயணாய!

**– அறந்தாங்கி சங்கர்,**
**சென்னை,**
**444160161**

# ஜாபாலி தீர்த்தம் மற்றும் அனுமன் ஆலயம்



**இராம குண்டம் :**

ஜாபாலி ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயம் எதிரில் அமைந்துள்ள குளத்தின் பெயர் இராமகுண்டம். ஜாபாலி என்ற மஹரிஷி தவமியற்றிய பவித்ரமான தலம். அதனால் இது ஜாபாலி தீர்த்தம் என்றழைக்கப்பட்டது. இங்கு தீர்த்த ஸ்நானம் மேற்கொள்பவர்களின் குறைகள் தீர்ந்து நிறைவடைவார்கள்.

இங்கு ஸ்வாமி சுயம்பு மூர்த்தியாக திகழ்கிறார். அனுமத் ஜெயந்தி இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த தீர்த்தத்தில் நீராடி அப்படியே ஆலய பிரதக்ஷிணை செய்தால் கஷ்டங்கள் விலகும் என்பது இங்கு உள்ள நம்பிக்கை. சீதாராமர் இந்த தீர்த்தத்தில் நீராடியதால் இது இராமகுண்டம் என அழைக்கப்படுவதாக பெரியோர்களின் வாக்கு.

ஜாபாலி ஆலயத்தின் மேற்கு திசையில் சீதா குண்டம் என்ற அழகான குளம் இயற்கை எழில் மிகுந்த சூழலில் அமைந்துள்ளது. துருவ தீர்த்தம் : துருவன் தீர்த்தமாடி தவமியற்றியதால் இந்த தீர்த்தம் துருவ தீர்த்தம் அதாவது துருவதாரா என அழைக்கப்படுகிறது. இங்கிருந்தே ஆஞ்சநேய ஸ்வாமிக்கு தீர்த்த கைங்கர்யம் நடைபெறுகிறது.



# 2020
# செப்டம்பர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| | செவ்வாய் யுரேனஸ் | | ராகு சுக்ரன் |
| சந்திரன் நெப்ட்யூன் | **செப்டம்பர்-2020**<br>01 – சுக்ரன் – கடகம்<br>02 – புதன் – கன்னி<br>09 – சனி – வநி.<br>10 – செவ்வாய் – வ.ஆ.<br>13 – குரு – வநி.<br>16 – சூரியன் – கன்னி<br>22 – புதன் – துலாம்<br>22 – ராகு – ரிஷபம்<br>22 – கேது – விருச்சிகம் | | |
| (சனி) | | | சூரியன் புதன் |
| (குரு) ப்ளூட்டோ கேது | | | |

**மேஷம்**

ராசி நாதன் ராசியிலேயே அமர அவரை குரு நோக்க இம்மாதம் தொடங்குகிறது. தனவரவிற்குக் குறைவிருக்காது. தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். தொழிலில் நிலையான வருமானம் வரவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் பணம் பலவழிகளிலும் சேரும்.

**ரிஷபம்**

ராசி நாயகன் சுக்ரன்தனஸ்தானத்தில் உலவிட அவரை குரு பார்க்கவும், தனஸ்தானாதிபதி சுகஸ்தானத்தில் உலவும் நிலையில் இம்மாதம் தொடங்குகிறது. புதனையும் சூரியனையும் குரு நோக்குகிறார். எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்தவாக்கைக் காப்பாற்றுவீர்கள். நிலம், மனை, வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**மிதுனம்**

ராசிநாயகன் மூன்றாம் இடத்தில் உலவிட மாதம் தொடங்குகிறது. சிறந்த இசையமைப்பாளராக, பாடகராகப் பாராட்டப்படுவீர்கள். கணிதம், பத்திரிகைத்துறையில் உள்ளவர்களின் வளர்ச்சி அதிகரிக்கும். உங்களின் கடின உழைப்பே செல்வம் தரும். சமூகத்தில் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

**கடகம்**

உங்கள் ராசிக்குப் 10–ல் செவ்வாய் உலவுவதும், அவரை குரு நோக்குவதும் சிறப்பு. ஆன்மீக அறநிலைப் பணியாளர்களுக்கு முன்னேற்ற சூழல் நிலவும். மகான்களின் ஆசிகள் கிடைக்கும். இயந்திரப் பணிகள் ஓரளவு லாபம்தரும். முக்கியமான காரியங்கள் இப்போது எந்ததடைகளும் இல்லாது நிறைவேறும்.

**சிம்மம்**

5–ல் குருவும், 6–ல் சனியும் உலவுவதால் உங்கள் திறமை வெளிப்படும். எதிரிகள் அடங்கிப்போவார்கள். வெளியூர், வெளி நாட்டுத்தொடர்புகள் ஆக்கம் தரும். ஏற்றுமதி – இறக்குமதி இனங்கள் லாபம் தரும். செவ்வாய் தனது சொந்த வீடான மேஷத்தில் உலவுவதால் தான–தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**

இம்மாதம் 2ஆம் தேதி புதன் ராசியில் பிரவேசிக்கிறார். சுக்ரன், சனி ஆகியோரது சஞ்சாரமும் சிறப்பாக உள்ளது. உங்களின் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். பெற்றோர்–பிள்ளைகளுக்கு அனுகூலம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். கலைஞர்கள் எழுத்தாளர்கள் நல்லவளர்ச்சி காண்பார்கள். நாவன்மையாலும் பொருள் சேரும்.

**துலாம்**

ராசி நாயகன் சுக்ரன் 9–ம்மிடத்திலிருந்து 10–ம்மிடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும். புதிய தொழில் தொடங்கவும் சந்தர்ப்பம் சாதகமாக உள்ளது. ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்களின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைக்கும்.

**விருச்சிகம்**

ராசிநாதனை தனாதிபதி குருநோக்க இம்மாதம் தொடங்குகிறது. எதிர்ப்பார்த்தபடியே பணம் வந்து சேரும். கொடுத்தவாக்கைக் காப்பாற்றுவீர்கள் குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகளால் மகிழ்ச்சி கூடும். தொழில் வீட்டில் ராஜக்கிரகமாகிய சூரியன் உள்ளதால் எல்லா செயல்களிலும் உடனடி வெற்றி கிட்டும்.

**தனுசு**

மாத ஆரம்பத்தில் செவ்வாய், சூரியன் ஆகியோர் நல்ல நிலையில் உலவிடுகின்றனர். குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ளும் வாய்ப்புகள் கிட்டும். மனமகிழ்ச்சி பெருகும். பணவரவு திருப்திகரமாகவே இருந்துவரும். தொலைத்தூரத் தொடர்பு ஆக்கம் தரும்.

**மகரம்**

சனி, செவ்வாய், புதன் ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. தெய்வப் பணிகளில் ஈடுபாடு உண்டாகும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் ஆற்றல் பெருகும். பணவரவு அதிகமாகும். உத்தியோகஸ்தர்கள், மருத்துவர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை நிலவிவரும்.

**கும்பம்**

சூரியன், புதன் 7–ல் அமர, அவர்களை குருநோக்க இம்மாதம் பிறக்கிறது. திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். நீண்டநாள் நல்ல ஆரோக்கியத்தைப் பெற்று மகிழ்வர். தகவல் தொழில் நுட்பத்துறையினர், மாணவர்கள், ஆகியோர் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள்.

**மீனம்**

2–ல் செவ்வாய், 6–ல் சூரியன், 10–ல் குரு ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. அரசியல், நிர்வாகம், சட்டம்–நீதி, வழிபாடுபோன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நல்லவாய்ப்புகள் கூடிவரும். 11ல் சனி வக்ரநிவர்த்தி பெறுகிறார். 7–ல் புதன் திருமண பாக்கியத்தை அருளுவார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# திருமலையப்ப ஸ்வாமி
# நவராத்திரி பிரம்மோத்ஸவம்
# 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை

**16-10-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : வைரகவச ஆபரணங்களுடன் தங்கத்திருச்சி உற்சவம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**17-10-2020**
சனிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**18-10-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**19-10-2020**
திங்கட்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**20-10-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**21-10-2020**
புதன் கிழமை
பகல் : அனுமத் வாகனம்
இரவு : யானை வாகனம்

**22-10-2020**
வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**23-10-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : தங்கத்திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**24-10-2020**
சனிக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : திருச்சி உத்ஸவம்



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர
பிரம்மோத்ஸவம்
2020 செப்டம்பர்
19 முதல் 27 வரை



26-09-2020 சனிக்கிழமை
இரவு : குதிரை வாகனம்

27-09-2020
ஞாயிற்றுக்கிழமை
இரவு : திருச்சி உத்ஸவம்
துவஜாவரோஹணம்





designpsivaprasad

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-08-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

